JESUS REDEEMS MINISTRIES

# வாலிபர் உலகம்

Volume: 16 | Issue: 09 | November 2025 | Mohan C. Lazarus | Annual Subscription: ₹ 100 | Single Copy: ₹ 10



எனது இரத்தத்தால் மீட்டுக்கொண்ட என் பிள்ளைகளை என்னோடு சேர்த்துக்கொள்ள,

# சீக்கிரமாய் வருகிறேன்!

# வாலிபர் உலகம்

## உள்ளே...


04





16

24





29


இளம் நெஞ்சங்களின் மனதில் வேதத்தின் விளக்கேற்றி, சிந்திக்க வழிகாட்டி, சீஷனாய் மாற்றி, அவர்களை உலகத்திற்கு வெளிச்சமாய் மாற்றுவதே இயேசு விடுவிக்கிறார் வாலிபர் ஊழியத்தின் உன்னத நோக்கமாகும். விசுவாச இளைஞர்கள் அவனியெங்கும் உருவாக, அவர்களுக்கென்றே மாதந்தோறும் வெளிவரும் பூங்கொத்து இது!

இப்பத்திரிக்கையைக் குறித்ததான உங்களது கருத்துக்கள், உங்களுக்கு பிரயோஜனமாயிருந்த கட்டுரைகள் மற்றும் நீங்கள் பெற்றுக் கொண்ட ஆசீர்வாதங்களை, உங்கள் பெயர் மற்றும் ஊருடன், **9750955547** என்ற எண்ணிற்கு SMS அல்லது Whatsapp மூலமாக தெரியப்படுத்துங்கள்.




அனைத்து இயேசு விடுவிக்கிறார் கிளை அலுவலகங்களிலும் சந்தா செலுத்தி நீங்கள் வாலிபர் உலகம் சந்தாதாரராகலாம். **youth.jesusredeems.com** என்ற **website** மூலமாகவும் ஆன்லைனில் சந்தா செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். உங்கள் சந்தா தேதி முடியும் நிலையில் இருந்தால் உடனே உங்கள் சந்தாவை புதுப்பிக்க மறவாதிருங்கள்.

JESUS REDEEMS MINISTRIES

**இயேசு விடுவிக்கிறார் வாலிபர் ஊழியம்,**
நாலுமாவடி, தூத்துக்குடி - 628 211.
**Phone: 04639-353333 | Cell:9750955547**
**E-mail: youth@jesusredeems.org**
**www.jesusredeems.com | youth.jesusredeems.com**

# தலைவாசல்

## எனக்குப் பிரியமான வாலிபர்களே!

இயேசுவின் நாமத்தில் உங்களுக்கு என் அன்பின் வாழ்த்துக்கள்!

இயேசுவுக்காக வைராக்கியமாய் வாழ்ந்துக் கொண்டிருக்கும் உங்கள் அனைவரையும் பார்க்கும்போது என் உள்ளம் மகிழ்கிறது. உலகத்தையும் அதின் ஆசை இச்சைகளையும் பின்பற்றிப் போய்க் கொண்டிருக்கின்ற திரளான வாலிபர்கள் மத்தியில், இயேசுவுக்காக வைராக்கியமாகப் பரிசுத்தமாக வாழ்ந்துக் கொண்டிருக்கும் நீங்கள் பாக்கியவான்கள், பாக்கியவதிகள்.

ஒரு சில வாலிபர்களின் உள்ளத்தில் தோன்றும் எண்ணம் என்னவென்றால், தேவனுக்காக நான் வைராக்கியமாய் வாழ்ந்துக் கொண்டிருக்கிறேன். பல பாவ சோதனைகளை மேற்கொண்டு, இயேசுவுக்காகப் பிரித்தெடுக்கப்பட்ட வாழ்க்கை வாழும் எனக்குதான் நிந்தையும், பிரச்சனையும் அவமானமும் வருகிறது. ஆனால் பெயர் கிறிஸ்தவர்களாக வாழ்கிறவர்கள் சந்தோஷமாக இருக்கிறார்கள் என்று மனம் சலித்துப் போகிறீர்கள். உங்களுடைய வேலைப்பாடு அக்கினியால் சோதிக்கப்படும் (1 கொரி. 3:13) என்று வேதம் சொல்கிறது. அவனவனுடைய வேலைப்பாடு வெளியாகும்; நாளானது அதை விளங்கப்பண்ணும். ஏனெனில் அது அக்கினியினாலே வெளிப்படுத்தப்படும். அவனவனுடைய வேலைப்பாடு எத்தன்மையுள்ளதென்று அக்கினியானது பரிசோதிக்கும்.

எப்படி வேண்டுமானாலும் வாழலாம் என்று உலகம் சொல்லும்போது, தேவனுடைய பிள்ளைகளாகிய நாம் கடைசிகால எழுப்புதலில் பயன்படுத்தப்பட வேண்டுமென்றால், உலகத்துக்கு ஒத்த வேஷந்தரியாமல் பிரித்தெடுக்கப்பட்ட வாழ்க்கை வாழ வேண்டும்.

**மோசே 3 மாதத்திலிருந்து 40 வயது வரை அரண்மனை வாழ்க்கை வாழ்ந்தான். ஆனால் அவன் யார், யாரை சார்ந்தவன், யார் தன்னை சிறு வயது முதல் காப்பாற்றினார், தன்னுடைய ஜனம் யார், தன்னுடைய தேவன் யார் என்று தெரிந்தவுடன் அநித்தியமான பாவசந்தோஷங்களை அநுபவிப்பதைப் பார்க்கிலும் தேவனுடைய ஜனங்களோடே துன்பத்தை அநுபவிப்பதையே தெரிந்துகொண்டான் (எபி. 11:25).**

**மோசேயின் வைராக்கியத்தைப் பார்த்து தேவன், முழு இஸ்ரவேலை வழிநடத்த அவனை ஒரு தலைவனாகத் தெரிந்துகொண்டார். அவன்மூலம் அற்புத அடையாளங்களைச் செய்தார்.**

**மோசேக்குப் பிறகு யோசுவாவின் விலைக்கிரயத்தை, வைராக்கியத்தைப் பார்த்து அடுத்த தலைவனாக உயர்த்தி பயன்படுத்தினார். இதேபோல் தேவனுக்காக வைராக்கியமாய் வாழும் உங்களையும் அப்படியே உயர்த்துவார்.**

**நீங்கள் மற்றவர்களோடு உங்களை ஒப்பிட்டு, மனம் சோர்ந்து போகாமல் கர்த்தரை மாத்திரம் கண்களுக்கு முன்பாக நிறுத்தி உங்கள் ஓட்டத்தைச் சிறப்பாக ஓடுங்கள். மோசே எப்படி கர்த்தருக்கு பிரியமில்லாத கூட்டத்தை விட்டு விலகி, கர்த்தருக்காகத் துன்பத்தை அனுபவிக்க தன்னை அர்பணித்துக்கொண்டபோது கர்த்தர் அவரைக்கொண்டு இஸ்ரவேலுக்கு பெரிய இரட்சிப்பை கட்டளையிட்டாரோ, அதுபோல நீங்களும் உலக சிற்றின்பங்களை வெறுத்து ஆண்டவருக்காக வைராக்கியமாக நிற்கும்போது உங்களைக்கொண்டும் உங்கள் கிராமத்தில், பட்டணத்தில் கர்த்தர் பெரிய அசைவைக்கொண்டு வருவார் என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை. உங்களுக்கான பிரதிபலன் அவரோடு கூட வருகிறது!**

கிறிஸ்துவின் பணியில்
**மோகன் சி. லாசரஸ்**



# PILOT





சாட்சி தொகுப்பு: காட்வின்

கோவில்பட்டி என்ற கிராமத்தில் பிறந்து, **Pilot** ஆக வேண்டும் என்ற கனவோடு பல கடினமான பாதைகளைத் தாண்டிப் படித்து, இன்றைக்கு **Pilot Academy (ARK 27 Aviation)** நடத்திக் கொண்டிருக்கும் சகோதரர் ஜியானி சாமுவேல் அவர்கள், பைலட் ஆவதற்கு எவ்வளவு சவால்களைச் சந்தித்தார் என்று அவரிடமே கேட்டுத் தெரிந்து கொள்வோமா?

## Hi, Brother... உங்களது குடும்பம் மற்றும் உங்களது சிறுபிராயம் பற்றிச் சொல்லுங்களேன்?

நான் தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டியில் ஒரு கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்தேன். எனது அப்பா ஒரு **public prosecutor**ஆக இருந்தார். அம்மா பள்ளியில் தலைமையாசிரியராக இருந்து ஓய்வு பெற்றார்கள். எனக்கு ஒரு அக்கா, அவர்கள் ஒரு மருத்துவராக இருக்கிறார்கள். சிறு வயதிலிருந்தே **pilot**ஆக வேண்டும் என்பதே எனது இலட்சியம். சிறு வயதிலேயே நீங்கள் என்ன ஆகப்போகிறீர்கள் என்று கேட்கும்போது, ‘‘நான் பைலட் ஆக வேண்டும்’’ என்று தான் சொல்லுவேன். அந்த வயதிலிருந்தே நான் ஒரு பைலட் என்ற கனவோடு தான் வாழ ஆரம்பித்தேன்.

## உங்களது படிப்பு மற்றும் இளம் வயதில் உங்கள் வாழ்க்கையின் திருப்புமுனை எப்படி இருந்தது?

நான் சிறு வயதிலிருந்தே ஒழுங்காக ஆலயத்திற்கு போவேன். என் பெற்றோருக்குக் கீழ்ப்படிதல் உள்ள ஒரு மகனாகவும் இருந்தேன். ஆனால் 8ஆம் வகுப்பிலிருந்து 10ம் வகுப்புவரை மிகவும் சுட்டித்தனமாகவும், நண்பர்களோடு சேர்ந்து ஊர் சுற்றுவது, டியூஷன் போகாமல் வெளியே போவது போன்ற காரியங்களைச் செய்து வந்தேன். எனது வீட்டில் எந்தக் குறையும் இல்லை. என் பெற்றோர் என்னை நன்றாகப் படிக்க வைத்தார்கள்; எல்லா வசதிகளும் செய்து கொடுத்தார்கள். ஆகவே அடுத்து என்ன செய்ய வேண்டும் என்ற எண்ணமே இல்லாமல், உலகத்தார் என்ன செய்வார்களோ அதுபோலவே நானும் வாழ்ந்து கொண்டிருந்தேன்.

இந்தச் சூழ்நிலையில் 10ஆம் வகுப்பு படித்துக் கொண்டிருக்கும்போது, என்னுடைய வலது பக்க முகமே இல்லாத அளவிற்கு ஒரு பெரிய விபத்து நடந்தது. அந்த விபத்து ஏற்பட்டதினால் நான் அநேக நாட்கள் வீட்டில் இருக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. பள்ளிக்குச் செல்ல முடியாது, எங்கேயும் போகமுடியாத சூழ்நிலை. அப்போது தான் என்னுடைய எதிர்கால வாழ்க்கையைப் பற்றி யோசிக்க ஆரம்பித்தேன். ஒருவேளை 10ஆம் வகுப்பு படிக்க முடியாமல் தோல்வி அடைந்து விட்டால், அடுத்து என்னுடைய வாழ்க்கை என்ன ஆகும் என்ற ஒரு பயம் உண்டானது. அப்பொழுது தான் நான் இன்னும் ஆண்டவரிடம் நெருங்க வேண்டும் என்று உணர ஆரம்பித்தேன். அதன்பிறகு வேதத்தைப் படிக்க ஆரம்பித்தேன், இயேசுவைக் குறித்து இன்னும் அதிகமாகத் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற

> சிறு வயதிலிருந்தே Pilot ஆக வேண்டும் என்பதே எனது இலட்சியம்.

ஆசை வந்தது. குடும்ப ஜெபத்தில் இணைந்து ஜெபிக்க ஆரம்பித்தேன். அதன்பிறகு நான் ஒரு சரியான ஒழுக்கத்திற்கு வர ஆரம்பித்தபின்பு தான் ஜெபம் எவ்வளவு முக்கியமானது, இயேசுவோடு நெருங்கி வாழ்வது எவ்வளவு முக்கியமானது என்பதை அறிந்து கொண்டேன். இது தான் என்னுடைய வாழ்வின் ஒரு திருப்புமுனையாக இருந்தது.

## பைலட் ஆக வேண்டும் என்ற கனவை அடைய நீங்கள் எடுத்த முயற்சிகள் என்ன?

10ஆம் வகுப்பு படிக்கும்போது இயேசுவுக்கு என்னை ஒப்புக் கொடுத்தேன். தினமும் ஜெபிக்கிற பழக்கத்தையும் கடைபிடித்து வந்தேன். ஜெபிக்க ஜெபிக்க நான் என்ன செய்ய வேண்டும், எது செய்யக் கூடாது என்ற காரியங்களை தெரிந்து கொண்டேன். 10ஆம் வகுப்பு முடித்தபின்பு, பைலட் ஆக என்ன செய்ய வேண்டும் என்று நிறைய விசாரிக்க ஆரம்பித்தேன். எனக்கு வழிகாட்ட யாரும் இல்லை. என் குடும்பத்திலும் சரி, நண்பர்கள் வட்டாரத்திலும் சரி, Aviation சம்மந்தமாக யாரும் படித்தது கிடையாது. நான் Diplamo in EEE எடுத்துப் படித்து முடித்தேன். அதன்பிறகு என் அப்பாவிடம் நான் ''பைலட் படிக்க ஆசைப்படுகிறேன்'' என்று சொன்னதும், அவர்களும் நிறைய இடங்களில் விசாரித்து, கடைசியாகச் சென்னையில் இது சம்மந்தமாக படிக்கிற Institute இருக்கிறது என்பதை அறிந்து, சென்னைக்கு சென்று நான் Flight Dispatch என்ற ஒரு Course எடுத்துப் படிக்க ஆரம்பித்தேன். இந்தக் கோர்ஸ் எடுத்துப் படித்துக் கொண்டிருக்கும்போது, பைலட் ஆக இது படிக்க வேண்டிய அவசியம் இல்லை என்று சொன்னார்கள். இது எனக்கு மிகுந்த ஏமாற்றமாக இருந்தது. எவ்வளவு ஏமாற்றங்கள் வந்தபோதும் ஜெபத்தை நான் விடவில்லை. இன்னும் அதிகமாக இயேசுவைத் தேட ஆரம்பித்தேன். அப்போதுதான் ஆண்டவர் என்னை அடுத்த நிலைக்குக் கொண்டு போனார். அதாவது Pilot Training Academyயில் சேர்ந்து படிக்க ஒரு வாய்ப்பைத் தேவன் கொடுத்தார். அதிலும் பெரிய ஏமாற்றம் அடைய வேண்டிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டது. இப்படி பல முயற்சிகளை எடுத்து, ஒவ்வொரு கட்டத்திலும் நான் நிறைய போராட்டங்களை எதிர்கொண்டு தான் படித்தேன்.

இயேசுவோடு நெருங்கி வாழ்வது எவ்வளவு முக்கியமானது என்பதை அறிந்து கொண்டேன்.







## முயற்சியைக் கைவிடாமல் தொடர்ந்தீர்கள்... நீங்கள் படித்த கோர்ஸ் போதுமானதாக இருந்ததா?

நான் இயேசுவை மிகவும் நெருங்க ஆரம்பித்தபோது, நான் பைலட் ஆக வேண்டும் என்று ஜெபத்தில் மிகவும் பிடிவாதமாக கேட்க ஆரம்பித்தேன். அந்தச் சூழ்நிலையில், நான் என்னென்ன செய்ய வேண்டும், எவையெல்லாம் செய்யக் கூடாது என்பதைச் சொல்லிக் கொடுத்தார். அந்த நேரத்தில் ஆண்டவரின் வார்த்தையின்படி நியூசிலாந்துக்கு படிக்கச் சென்றேன். அங்கும் நிறைய பிரச்சனைகளை எதிர்கொள்ள வேண்டிய சூழ்நிலை வந்தது. வெளிநாட்டில் படித்துக் கொண்டிருக்கும்போது, திடீரென்று அப்பாவுக்கு உடல்நிலை சரியில்லாமல் ஆனது. உடனே, 'படிப்பைத் தொடரலாமா வேண்டாமா' என்ற கேள்வி எனக்குள் ஏற்பட்டது. படிப்பை விட்டு அப்பாவைப் பார்க்கச் சென்றால் என்னுடைய கனவை அடைய முடியாது. இப்படி பலவிதமான கேள்விகளோடு, ஆண்டவரை

நோக்கி நான் ஜெபித்தேன். நியூசிலாந்தில் நான் சென்றுகொண்டிருந்த ஆலயத்தில் உள்ள நண்பர்களிடம் சொல்லி அப்பாவிற்காக ஜெபித்தபோது, அப்பாவிற்கு சுகம் கிடைத்தது. எனக்குள் இன்னும் விசுவாசம் பெருக ஆரம்பிக்க, இன்னும் அதிகமாக ஜெபிக்க ஆரம்பித்தேன். ஜெபிக்க, ஜெபிக்க, ஆண்டவரைத் தேட தேட இன்னும் ஆச்சரியமான காரியங்களைப் பெற்றுக் கொள்ள ஆரம்பித்தேன். நான் என் படிப்பை முடித்து விட்டு 2019ஆம் வருடம் இந்தியாவிற்கு வந்தேன்.



**யப்பா... இவ்வளவு போராட்டத்திற்கு பிறகு படிப்பை முடித்துச் சொந்த தேசத்திற்கு வந்தீர்கள்... வெளிநாட்டில் சென்று பைலட் படித்து வந்த உங்களுக்கு நல்ல வேலை உடனே கிடைத்திருக்குமே?**

(சிரித்தபடி) இல்லை...! நான் வேலைக்குப் போனால் **pilot**ஆக தான் போவேன் என்று பிடிவாதமாக ஜெபித்துக் கொண்டிருந்தேன். என் ஜெபத்திற்கு பல மாதங்கள் பதில் கிடைக்கவேயில்லை. வேலையில்லாமல் இருக்கும்போதும் நிறைய போராட்டங்களைச் சந்தித்தேன். மறுபடியும் திடீரென்று அப்பாவிற்கு உடம்பு சரியில்லாமல் 2019ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் இறந்து விட்டார்கள். அப்பா இறந்த பிறகு எனக்கு என்ன செய்ய வேண்டுமென்றே தெரியவில்லை. என் அக்காவிற்கு அப்போது திருமணம் ஆகவில்லை. அதற்கு என்ன செய்வது என்று



மிகவும் குழம்பி போயிருந்தேன். நான் படித்து முடித்தும் வேலை பார்க்காமல் பிடிவாதமாக இருந்தேன். இப்படிப்பட்ட சூழ்நிலையில் அப்பா இல்லாததால், குடும்பத்தை அடுத்தக்கட்ட நிலைக்கு எடுத்துச் செல்ல வேண்டிய கட்டாயத்திற்குள் நான் தள்ளப்பட்டேன். கர்த்தர் என் ஜெபத்தைக் கேட்டு 2022ஆம் ஆண்டு அக்காவிற்கு நல்ல முறையில் திருமணம் முடித்து வைக்க உதவி செய்தார். இது என்னால் ஆனது அல்ல, இது முற்றிலும் ஜெபத்தினால் உண்டானதே!

இந்தச் சூழ்நிலையில் தான் ஒருநாள் நாலுமாவடிக்கு வந்து மோகன் அங்கிள், பன்னீர் செல்வம் அங்கிள் இரண்டு பேரையும் பார்த்துப் பேசும்போது, ''நீ படித்து முடித்து விட்டு வீட்டில் சும்மா இருக்கக் கூடாது, உங்களுக்கான வேலை எதுவாக இருந்தாலும் அதைச் செய்ய வேண்டும்,'' என்று எனக்கு ஆலோசனைக் கொடுத்தார்கள்.

அவர்கள் 2 பேரும் சொன்ன ஆலோசனையைக் கேட்டு ஜெபித்தபோது, எனக்குள் உணர்வு வந்தது. அதன் பிறகு என் ஜெபமே வித்தியாசமாக இருந்தது. கர்த்தருடைய

> படித்து முடித்து விட்டு வீட்டில் சும்மா இருக்கக் கூடாது, உங்களுக்கான வேலை எதுவாக இருந்தாலும் அதைச் செய்ய வேண்டும்



வழிநடத்துதலின்படி, சென்னையில் நான் கேட்ட துறையான Aviation Collegeல் Administrative officer ஆகவும் Assistant Professor ஆகவும் 2 வருடம் வேலைப் பார்த்தேன். வேலைப் பார்ப்பதற்கு முன்பு பல திட்டங்களையும் ஆயத்தப்படுத்தி வைத்திருந்தேன். அந்தத் திட்டத்தைப் பல கம்பெனிகளில் சமர்ப்பிக்கும்போது ஒரு குழு, புது பிசினஸ் ஆரம்பிக்கலாம் என்று என்னை அழைத்து, ARK 27 Aviation Academyயை ஆரம்பித்தோம். (ARK – நோவாவின் பேழை).

### சூப்பர்... ARK 27 Aviation Academy என்றால் என்ன? இப்போது இந்த Aviation Class எப்படி போய்க் கொண்டிருக்கிறது?

Aviation Academy என்றால் pilot training academy. பைலட் ஆக ஆர்வமுள்ள மாணவர்களின் தேவைகளை நிவர்த்தி செய்வது தான் இந்த ARK 27 Aviation Academy. ஏனென்றால் நான் படிக்க போகும்போது எனக்கு வழிகாட்டுவதற்கு யாரும் இல்லை. அதனால் நான் நிறைய பிரச்சனைகளைச் சந்தித்தேன். அடுத்த தலைமுறைக்கு இந்தப் பிரச்சனை இல்லாமல், அவர்களுக்கு வழிகாட்ட வேண்டும் என்பதே எனது நோக்கம். நான் ஒரு பைலட் ஆக வேண்டும் என்று அடம்பிடித்து போன என்னை, இப்பொழுது Aeroplane வாங்கும் அளவுக்கு உள்ள ஒரு குழுவோடு இணைத்து என்னை உயர்த்தி வைத்திருக்கிறார்.

### வாலிபர்களுக்கு என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?

வாலிபர்களாகிய நீங்கள் ஒரு முடிவை எடுக்கும்போது, முதலாவது கர்த்தரை முன்நிறுத்திச் செய்யுங்கள். அப்போது தேவன் காரியங்களைச் செய்வார். வாலிபர்கள் ஒருபோதும் சோம்பேறிகளாக இருக்கக் கூடாது. ஒரு தோல்வி வந்தால் அங்கேயே நின்று விடாமல், அடுத்தக் கட்டதிற்கு முன்னேறிச் செல்ல வேண்டும். அதோடு மட்டுமல்லாமல் நிறைய பிரயாசங்களை எடுக்கும்போது கட்டாயம் தேவன் உங்களையும் உயர்த்துவார். ஆனால் அதுவரைக்கும் கர்த்தரின் கரத்தில் அடங்கி இருக்க வேண்டும். நீங்கள் எப்பொழுது கர்த்தரை தேடுகிறீர்களோ, அப்பொழுது தான் தேவன் மேல் பயம் இருக்கும். கர்த்தருக்கு பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம் என்ற வசனத்தையே நான் இன்றைக்கு வரைக்கும் கடைபிடித்துக் கொண்டி ருக்கிறேன். கர்த்தருக்கு முதலிடம் கொடுக்கும்போது உங்களது படிப்பில், வேலையில் கர்த்தர் உங்களை உயர்த்துவார்.





முகப்பு செய்தி: சதீஷ்

# சீக்கிரமாய் வருகிறேன்!!

உலகத் தோற்றத்திற்கு முன்னே பாவத்தில் விழுந்த ஜனங்களை மீட்டு எடுக்கும் இரட்சகராக, இயேசு தமது முதல் வருகையில் வெளிப்பட்டார். உலக இரட்சகராகப் பிதாவினால் அனுப்பப்பட்ட இயேசு கிறிஸ்து, நம் அனைவருக்கும் ஒரே பலியாகச் சிலுவையில் தம்மை அர்ப்பணித்து, இரட்சிப்பின் கிரியையை நிறைவேற்றினார். மரித்து மூன்றாம் நாள் உயிரோடெழுந்து பரமேறிச்சென்ற இயேசு, அவர் சொன்னபடியே மீண்டும் இந்தப் பூமிக்கு நியாயாதிபதியாக வரப் போகிறார். அவருடைய நியாயத்தீர்ப்புக்கு யாரும் தப்பித்துக் கொள்ள முடியாது. கிறிஸ்துவின் இரண்டாம் வருகையைக் குறித்து பழைய, புதிய ஏற்பாடு புத்தகங்கள் இரண்டிலுமே அனேக இடங்களில் தெளிவாக எழுதப்பட்டிருக்கிறது. ''நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம் பண்ணின பின்பு நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி, நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக் கொள்வேன்'' (யோவான் 14:3) என்றார்.



நாம் ஒரேதரம் மரிப்பதும் பின்பு நியாயத்தீர்ப்படைவதும் தேவனால் நியமிக்கப்பட்ட நியதி. இயேசு இந்தப் பூமியை நியாயம் தீர்க்க வருவார் என்பதை ஏனோக்கு முதல் தீர்க்கதரிசிகள் வரையிலும், புதிய ஏற்பாட்டு அப்போஸ்தலர்கள் பவுல், பேதுரு மற்றும் யோவானும் தெளிவாகக் கூறியுள்ளார்கள். ''நோவாவின் காலத்தில் எப்படி நடந்ததோ அப்படியே மனுஷகுமாரன் வரும் காலத்திலும் நடக்கும்'' (மத்தேயு 24:37). நோவாவின் காலத்தில் ஜனங்கள் புசித்துக் குடித்து தங்கள் மனம் போன போக்கில் வாழ்ந்து, உணர்வற்றவர்களாய் இருந்தனர். பூமி நியாயம் தீர்க்கப்படும் எனச் சொன்ன போதும், ஒருவரும் கேட்கவில்லை. ஆனால் ஒருநாள் ஜலபிரளயம் வந்து எல்லோரையும் வாரிக்கொண்டு போனது. அதுபோலவே இயேசு கிறிஸ்துவின் வருகையும் இருக்கும். இன்று வருகையின் செய்திகள் எத்தனை சொல்லப்பட்டாலும், ஜனங்கள் அதை ஏற்க மனம் இல்லாமல் இருக்கிறார்கள். எனவே நீங்கள் எச்சரிக்கையாய் இருந்து மனந்திரும்பி அவரின் வருகைக்கு ஆயத்தப்பட வேண்டும்.

இன்று நம் கண் எதிரே நடைபெற்றுக் கொண்டிருக்கும் யுத்தங்களும் யுத்தங்களின் செய்திகளும் இயேசுவின் வருகையைத் தெள்ளத் தெளிவாக நமக்குக் காட்டுகின்றன. லோத்தின் நாட்களில் இருந்த சோதோம் கொமோரா பாவமும், அநியாயங்களும் அக்கிரமங்களும் இன்று உலகம் முழுவதும்

பெருகிக்கொண்டே வருகின்றன. அன்று கர்த்தருக்கு பயந்து பரிசுத்தமுள்ள வாழ்க்கை வாழ்ந்தவர்கள் ஒரு சிலரே. இன்றும் அப்படித்தான் இருக்கின்றது. உங்களைச் சுற்றி இருக்கும் ஜனங்கள் எப்படிப்பட்ட பாவத்தில் சிக்கி இருந்தாலும், நீங்கள் பாவம் செய்யாதபடிக்கு எச்சரிக்கையுள்ளவர்களாக இருந்து இயேசுவின் வருகைக்கு ஆயத்தமாகுங்கள். ''**மனுஷகுமாரன் வரும் நாளையாவது நாழிகையாவது நீங்கள் அறியாதிருக்கிறபடியால் விழித்திருங்கள்**'' (மத்தேயு 25:13) என்று வேதம் எச்சரிக்கிறது. கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில் அவரை அறியாதவர்கள் மற்றும் அறிந்தும் அறியாதவர்களாக இருப்பவர்கள் நியாயத்தீர்ப்பின் நாளிலே கலக்கமடைவார்கள். பயமும் திகிலும் அவர்களைப் பிடிக்கும். இயேசுவின் இரத்தத்தால் மீட்கப்பட்டு, அவருடைய வார்த்தைகளுக்குக் கீழ்ப்படிந்து நடந்து, அவர் வருகைக்குக் காத்திருக்கிறவர்களோ கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு நாளைக் குறித்து பயப்படமாட்டார்கள். இயேசுவின் வருகையை மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொள்வார்கள்.



இன்று காண்கின்ற உலகம் ஒருநாள் அக்கினி தீக்கீரைக்கு ஒப்புக்கொடுக்கப்படும். ''உலகமும் அதின் இச்சையும் ஒளிந்துபோம்; தேவனுடைய சித்தத்தின்படி செய்கிறவனோ என்றென்றைக்கும் நிலைத்திருப்பான். பிள்ளைகளே இது கடைசி காலமாயிருக்கிறது. அந்திக்கிறிஸ்து வருகிறானென்று நீங்கள் கேள்விப்பட்டபடி இப்பொழுதும் அநேக அந்தி கிறிஸ்துக்கள் இருக்கிறார்கள். அதினாலே இது கடைசிகாலமென்று அறிகிறோம்'' (1 யோவான் 2:17-20). எனவே காலத்தை அறிந்து பரிசுத்தமாய் வாழ அர்ப்பணித்துக் கொள்ளுங்கள். ஏனெனில் இயேசுவின் வருகைக்கு முன்பாக அவர் சொன்ன எல்லா தீர்க்கதரிசனங்களும் மிகத் துல்லியமாக நிறைவேறிக் கொண்டிருக்கிறது.

லூக்கா 21:36ஆம் வசனத்தில் ''**ஆகையால் இனி சம்பவிக்க போகிற இவைகளுக்கெல்லாம் நீங்கள் தப்பிக்க எப்பொழுதும் ஜெபம்பண்ணி விழித்திருங்கள்**'' என்பதாக இயேசு சொல்கிறார். ஜெபம் பண்ணாமல் வாழ்ந்து கொண்டிருந்தால் ஆண்டவருடைய வருகையில் நாம் கைவிடப்படுவோம். எனவே ஆவியில் விழிப்புள்ளவர்களாய் நம்மைச் சுற்றி நடக்கும் காரியங்களை ஆராய்ந்து வேதத்தோடு ஒப்பிட்டு ஜெபிக்க வேண்டும். ஒருநாளைக்கு 5 நிமிடம் கூட ஜெபம் பண்ணாத கிறிஸ்தவர்கள் அநேகர் இருக்கிறார்கள். ஆண்டவர் வரும்போது எக்காளம் தொனிக்கும்; அவர் தம்முடைய தூதர்களோடு வருவார். அப்பொழுது தேவ ஜனங்கள் எடுத்துக் கொள்ளப்படுவார்கள், ஜெபிக்காதவர்கள் கைவிடப்பட்டு போவார்கள். ஆண்டவருடைய வருகையில் காணப்பட வேண்டுமானால், பாவத்திற்கு தப்பிப் பிழைக்க வேண்டுமானால், விழித்திருந்து ஜெபம் பண்ண வேண்டும். ஜெபிக்காத கிறிஸ்தவர்கள் கைவிடப்படுவீர்கள். நீங்கள் எத்தனை இலட்சம் ஊழியத்திற்கு காணிக்கையாகக் கொடுத்தாலும் ஜெபிக்காவிட்டால் வருகையில் காணப்படவே முடியாது. வருகைக்குரிய அடையாளங்கள் இனி தீவிரமாய் காணப்படும். அவர் வாசற்படியில் வந்து நிற்கிறார். இனி காலம் செல்லாது. வருகைக்கு ஆயத்தப்படுங்கள்.

**எனக்கன்பான வாலிபர்களே! பாவம் நிறைந்த உலகிலே நீங்கள் மூழ்கி, பரிசுத்த வாழ்வை இழந்து ஜெபத்தை மறந்து தேவனை விட்டு விலகி உங்கள் நித்திய வாழ்வை இழந்து போகப் போகிறீர்களா? இல்லை, "இதோ சீக்கிரமாய் வருகிறேன்; அவனவனுடைய கிரியைகளின்படி அவனவனுக்கு நான் அளிக்கும் பலன் என்னோடே கூட வருகிறது" (வெளி. 22:12) என்று வாக்குச் சொன்ன இயேசுவை எதிர்கொள்ள ஜாக்கிரதையுடன் விழித்திருந்து, ஜெபித்து பரிசுத்த வாழ்க்கை வாழப் போகிறீர்களா? என்பதை இன்றே முடிவு செய்யுங்கள். "வருகிறேன் என்று சொன்னவர், சீக்கிரமாய் வந்திடுவார்"**

# அதிசயம் நடக்கும்! கசப்பு மதுரமாகும்!

*ஒரு சமயம் ஒரு சகோதரி என்னைச் சந்தித்து, ஜெபிக்க வந்தார்கள். என்ன காரியத்திற்காக ஜெபிக்க வேண்டும் என்று கேட்டபோது, "ஆண்டவர் என்னை எடுத்துக் கொள்ளும்படியாக எனக்காக ஜெபியுங்கள்" என்று கண்ணீருடன் சொன்னார்கள். அதிர்ச்சியாக 'ஏன்' என்று நான் அவர்களைக் கேட்டபோது, "என் பிரச்சனைகளை என்னால் தாங்க முடியவில்லை! எனக்கு வாழவே பிடிக்கவில்லை! நான் மரித்து விட்டால் நல்லது!" என்று வேதனையோடு சொன்னார்கள்.*

அந்தச் சகோதரியினுடைய உள்ளம் காயப்பட்டு, தன் வாழ்க்கையைக் குறித்த ஒரு கசப்பு அவர்களுக்குள் வந்துவிட்டது. ''நம்மைச் சிருஷ்டித்த கர்த்தர், நம்மை எடுத்துக் கொள்கிறவரல்ல! நம்முடைய வாழ்க்கையில் காணப்படுகிற கசப்புகளை மதுரமாக மாற்றுகிறவர்'' என்று அவர்களுக்கு ஆறுதல் சொல்லி ஜெபித்து அனுப்பினேன்.

இன்றைக்கு நீங்களும்கூட, ''வாழ்க்கை கசந்து விட்டது, வாழ்வதைவிட மரித்துவிடலாம்'' என்று எண்ணி கலங்குகிறீர்களா? ''ஏன் எனக்கு மாத்திரம் இப்படி நடக்கிறது, ஏன் நான் வாழ வேண்டும்'' என்று பலவிதமான கேள்விகள் உங்கள் உள்ளத்தில் எழும்பிக் கொண்டிருக்கிறதா? கலங்காதீர்கள், உங்களுக்கு ஒரு அதிசயம் நடக்கும்! உங்கள் கசப்பு மதுரமாகும்! கசப்பான உங்கள் வாழ்க்கை, மதுரமாக மாறும்!

''எப்படி மாறும்'' என்று எண்ணுகிறீர்களா? ''இவ்வளவு நாளும் மாறாமல், இனிமேல் மாறப்போகிறதா,'' என்று சந்தேகிக்கிறீர்களா? **"உன்னை அதிசயங்களைக் காணப்பண்ணுவேன்"** (மீகா 7:15) என்று கர்த்தர் உங்களுக்குக் கொடுத்த வாக்கை நினைத்துக் கொள்ளுங்கள். உங்கள் பிரச்சனை எதுவாக இருந்தாலும், அதை மாற்ற, உங்களை விடுதலையாக்க, உங்களை வழிநடத்த, தடைகளை மாற்ற, உங்கள் தேவைகளைச் சந்திக்க, அவர் அதிசயங்களைச் செய்வார்! இஸ்ரவேல் மக்களை, எகிப்து தேசத்திலிருந்து வழிநடத்திக் கொண்டு வந்தபோது, எப்படிப்பட்ட அதிசயங்களை அவர்கள் மத்தியில் கர்த்தர் செய்தாரோ, அதேவிதமான அதிசயங்களை உங்களுக்கும் செய்வார்!



செய்தி:
மோகன் சி. லாசரஸ்

## கசப்பு

''அவர்கள் (இஸ்ரவேல் ஜனங்கள்) மூன்று நாள் வனாந்தரத்தில் தண்ணீர் கிடையாமல் நடந்தார்கள். அவர்கள் மாராவிலே வந்தபோது, மாராவின் தண்ணீர் கசப்பாயிருந்ததினால் அதைக் குடிக்க அவர்களுக்குக் கூடாதிருந்தது; அதினால் அவ்விடத்துக்கு மாரா என்று பேரிடப்பட்டது. மோசே கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டான்; அப்பொழுது கர்த்தர் மோசேக்கு ஒரு மரத்தைக் காண்பித்தார்; அதை அவன் தண்ணீரில் போட்டவுடனே, அது மதுரமான தண்ணீராயிற்று'' (யாத்.15:22-25).

தேவ ஜனங்கள் செங்கடலைக் கடந்து, மூன்று நாட்கள் சுமார் 30 லட்சம் மக்கள் வனாந்தரத்தில் தண்ணீர் இல்லாமல் தாகத்தோடு நடந்தார்கள். இதில், 'சிறு குழந்தைகள், வாலிபர்கள், வயோதிபர்கள்' என்று எல்லோரும் இருந்தார்கள். 'தாகத்தோடு நடப்பது' என்பது எவ்வளவு வேதனையான ஒரு காரியம். உள்ளமும், சரீரமும் சோர்ந்து போய்விடும். சிறு பிள்ளைகள்,



‘‘அம்மா தாகம் எடுக்கிறது தண்ணீர் வேண்டும்’’ என்று கேட்கும்போதெல்லாம், பெற்றோர் எப்படி வேதனைப்பட்டிருப்பார்கள்! மூன்று நாட்கள் வேதனையோடும், தாகத்தோடும் நடந்தவர்கள், ‘‘மாரா’ என்கிற இடத்திற்கு வந்தபோது, அங்கே ஒரு நீரூற்றைக் கண்டார்கள்! தண்ணீரைப் பார்த்தவுடன் எவ்வளவாக அவர்கள் மகிழ்ந்திருப்பார்கள்!



‘‘மூன்று நாட்கள்பட்ட வேதனைக்கு ஒரு முடிவு வந்துவிட்டது! கர்த்தர் நமக்குத் தண்ணீரைத் தந்துவிட்டார்’’ என்று சொல்லி, மிகவும் சந்தோஷப்பட்டிருப்பார்கள். ஆனால் மிகுந்த ஆசையோடு போய்த் தண்ணீரை அள்ளிக் குடித்தபோது, அந்தத் தண்ணீர் கசப்பாயிருந்தது! அவர்களால் அந்தத் தண்ணீரைக் குடிக்க முடியவில்லை. கசப்பு! அது, தாகத்தைத் தீர்க்கிற தண்ணீராக இல்லை. பெருத்த ஏமாற்றம்! தாகம் தீர்க்கும் தண்ணீரை எதிர்பார்த்தால், கசப்பான தண்ணீர்! நன்மையை எதிர்பார்த்திருந்தால் தீமை வருகிறது!

நம்முடைய வாழ்க்கையில், நாம் சந்திக்கிற ஏமாற்றங்கள், நமக்குக் கசப்பைக் கொண்டு வருகிறது. ‘‘நான் எதிர்பார்த்தபடி என் வாழ்க்கை அமையவில்லை, நான் எதிர்பார்த்தபடி எனக்கு வேலை அமையவில்லை, நான் எதிர்பார்த்தது ஒன்று, எனக்கு நடந்தது ஒன்று’’ என்ற ஏமாற்றம்...!

ஏமாற்றம், வாழ்க்கையின் மீது ஒரு வெறுப்பைக் கொடுக்கிறது. சிலர், இதனால் தவறான முடிவெடுத்து, தங்களை மாய்த்துக் கொள்கிறார்கள். அது, முட்டாள்தனமான ஒரு முடிவு! தற்கொலை செய்து கொள்வதினால், பிரச்சனை முடிந்து போவதில்லை. தற்கொலை செய்கிறவர்கள், நரகத்தில்தான் பங்கடைவார்கள்! ஆகவேதான், தற்கொலை செய்யும்படியான தூண்டுதலை சாத்தான் உண்டாக்குகிறான். கசப்பான சூழ்நிலையை மாற்ற, அதிசயம் செய்கிற கர்த்தர் இருக்கிறார். குடிக்கவே முடியாமலிருந்த கசப்பான தண்ணீரை மதுரமாக மாற்றி ஒரு பெரிய அதிசயத்தைக் கர்த்தர் அன்று செய்தார். உங்களுக்கும் அதேவிதமான அதிசயத்தை இன்று அவர் செய்வார்!

ஒரு வாலிபன் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த சமயம், அவனுடைய வீட்டிலும், படிப்பிலும் உண்டான பிரச்சனையினால் அவன் மிகவும் காயப்பட்டு அவனுக்கு வாழ்க்கை கசந்தது. தான் வைத்திருந்த எல்லா நோட்டுகளிலும், ‘‘வாழ்வது வீண்! வாழ்வது முட்டாள்தனம்!’’ என்று எழுதி வைத்திருந்தான். தன் வீட்டு அறையின் சுவர்களிலெல்லாம் இப்படியாக எழுதி வைத்திருந்தான். அவனுக்கு வாழப் பிடிக்கவில்லை, ‘‘மரித்துவிட்டால் நல்லது’’ என்று எண்ணினான்.

ஒருநாள் மாலை நேரத்தில், ‘‘இன்றைக்கு இரவுத் தற்கொலை செய்து மரித்துவிட வேண்டும்’’ என்று தீர்மானித்தான். அந்த நேரத்தில், அவனோடு படித்துக் கொண்டிருந்த இரண்டு நண்பர்கள், அவனைப் பார்க்க வந்தார்கள். அப்போது அவர்கள் அவனைப் பார்த்து, ‘‘நாங்கள் ஜெபம் பண்ணப் போகிறோம், நீயும் எங்களோடு வருகிறாயா’’? என்று கேட்டார்கள். அப்போது, ‘‘நான் ஒரு கிறிஸ்தவனல்ல, என்னை ஏன் ஜெபம் பண்ணக் கூப்பிடுகிறார்கள்’’ என்று அவன் யோசித்தான். ‘‘சரி, கடைசியாக இவர்கள் எப்படித்தான் ஜெபிக்கிறார்கள், என்று ஒருமுறை பார்த்துவிட்டு, செத்து போகலாமே!’’ என்று எண்ணியவனாக அவர்களோடு சென்றான்.

''அவர்கள் ஒரு கிறிஸ்தவ ஆலயத்திற்குப் போவார்கள்'' என்று அவன் நினைத்தான். ஆனால் அவர்களோ, அருகிலிருந்த ஒரு மலையடிவாரத்திற்குப் போய், அங்கிருந்த ஒரு பாறையில் முழங்கால் படியிட்டார்கள். அங்கே ஒரு சிலுவைகூட இல்லை, கிறிஸ்தவர்களுக்குரிய ஒரு அடையாளமும் இல்லை. ''இங்கே எப்படி சாமி கும்பிடுவார்கள்'' என்று எண்ணினான். என்றாலும், அவர்களுக்கு அருகாமையில் அவன் உட்கார்ந்து, அவர்கள் ஜெபம் பண்ணுவதைக் கவனித்துக் கொண்டிருந்தான். அவர்கள் இயேசுவை, ''அப்பா...'' என்று அழைத்து, ஒரு தகப்பனிடத்தில் பிள்ளை பேசுவதுபோலப் பேசினார்கள். ''இறைவனை, ''அப்பா'' என்று அழைக்கலாமா! அவரோடு நாம் பேசலாமா!'' என்று அவன் ஆச்சரியத்தோடு அவர்களைப் பார்த்துக் கொண்டிருந்தபோது, இயேசு கிறிஸ்து அவனைச் சந்தித்தார். தன்னையும் அறியாமல் அவன் முழங்கால்படியிட்டு, இயேசு கிறிஸ்துவோடு பேச ஆரம்பித்தான். மிகுந்த கண்ணீரோடு அழுது, தன் வாழ்க்கையின் கசப்பை அவரிடத்தில் அவன் சொன்னான். இயேசு கிறிஸ்து அவனைத் தொட்டார். அவனுடைய இருதயத்திலிருந்த கசப்பெல்லாம் மாறி, ஒரு சந்தோஷம், ஒரு ஆறுதல், ஒரு நம்பிக்கை உள்ளத்தை நிரப்பிற்று. வாழ்க்கையில் இருந்த கசப்பு மதுரமாக மாறிற்று! பிற்காலத்தில் அவன் ஒரு ஊழியக்காரனாக மாறி, ஏராளமான மக்களுக்கு இயேசு கிறிஸ்துவின் ஆறுதலைப் பிரசங்கித்தான். உங்கள் வாழ்க்கையின் கசப்பையும், இயேசு மதுரமாக மாற்றுவார்! அதற்காக அவர்அதிசயங்களைச் செய்வார்!

சரி... இந்த அதிசயங்களைப் பெற்றுக் கொள்வது எப்படி?

## மரத்தை நோக்கிப் பாருங்கள்!

**மாராவின் தண்ணீர் கசப்பாக இருந்தபடியினால், மோசே கர்த்தரை நோக்கிப் பார்த்தார். கர்த்தர் மோசேக்கு ஒரு மரத்தைக் காண்பித்தார். அதை மோசே தண்ணீரில் போட்டவுடனே, அது மதுரமான தண்ணீராயிற்று** (யாத்.15:25). கசப்பை மாற்றக்கூடிய வல்லமை அந்த மரத்திற்கு இருந்தது. அந்த மரம், அந்தக் கசப்பான தண்ணீருக்கு அருகிலேயே இருந்தது.

மோசே அந்த மரத்தை நோக்கிப் பார்த்தார்! அதை வெட்டி, அந்தத் தண்ணீரில் போட்டார்! அதிசயம் நடந்துவிட்டது! உங்கள் வாழ்க்கையின் கசப்பையும் மாற்றக்கூடிய மரம் உங்கள் அருகிலேயே இருக்கிறது. அந்த மரத்தை நோக்கிப் பாருங்கள், உங்கள் கசப்புகள்



மாறும்! அதுதான் இயேசு கிறிஸ்து இரத்தம் சிந்தி மரித்த, 'சிலுவை' மரம். இயேசு கிறிஸ்துவின் சிலுவையை நோக்கிப் பாருங்கள், உங்கள் கசப்புகள் மதுரமாக மாறும்!

### இதை வாசித்துக்கொண்டிருக்கும் அன்பு வாலிபர்களே...!

*உங்கள் வாழ்விலும் கசப்பான அனுபவங்கள் வரும்போது, நீங்களும் இயேசு கிறிஸ்துவின் சிலுவையை நோக்கிப் பாருங்கள். உங்கள் கசப்பு மதுரமாக மாறும்! உங்களுக்காக, உங்கள் வாழ்க்கையில் காணப்படுகிற கசப்புகளை மாற்றத்தான், கர்த்தராகிய இயேசு கிறிஸ்து சிலுவையில் கசப்பை ருசி பார்த்தார். இன்றைக்கு, உங்களுக்கு வாழ்க்கை கசந்து விட்டதோ? "ஏன் இப்படி வாழ வேண்டும்" இதைவிட மரித்துவிட்டால் நல்லது என்று எண்ணுகிறீர்களோ? சிலுவை மரத்தை நோக்கிப் பாருங்கள்!*

*அங்கே உங்களுக்குப் பதில் உண்டு! சிலுவையில் தொங்கிய இயேசு கிறிஸ்துவை நோக்கிப் பாருங்கள்! அவர் உங்கள் கசப்பை மதுரமாக்குவார்! அவரிடத்தில் உங்கள் பிரச்சனைகளைச் சொல்லுங்கள்! மனம் திறந்து அவரோடு பேசுங்கள். உங்கள் வேதனைகளை எல்லாம் அவரால்தான் புரிந்து கொள்ள முடியும். அவரால்தான் உங்கள் துக்கத்தை மாற்ற முடியும்!*


புதிர்: ரேச்சல்

# வேதாகம புதையல் வேட்டை

**கீழ் கொடுக்கப்பட்டுள்ள படங்களில் ஒரு வசனம் மறைந்திருக்கிறது. அந்த வசனத்தை வேத ஆதாரத்துடன் கண்டுபிடித்து எங்களுக்கு அனுப்பவும்.**



1



2




3



4




5




6

பதில் வந்து சேர வேண்டிய கடைசி நாள் 15.11.2025




**கடந்த மாத வெற்றியாளர்**

**சகோ. ஷீனு, கடலூர்**

அவர்களை வாழ்த்துகிறோம்.

## கடந்த மாத விடைகள்

1. D - தாவீது தனது பெயரை மாற்றவில்லை.

2. B - சாமுவேல் தீர்க்கதரிசி சவுலையும் தாவீதையும் இஸ்ரவேலின் ராஜாக்களாக அபிஷேகம் செய்தார்.

3. C - பத்மு தீவில் (வெளி1:9)

4. B - மிரியாமும் ஆரோனும் மோசேயின் உடன்பிறந்தவர்கள் (யாத். 15:20-21)

5. A - சிம்சோன் தெலீலாவால் தாக்கப்பட்டு, பின்னர் தனது பலத்தின் ரகசியத்தை அவளுக்கு வெளிப்படுத்தினார் (நியா16:18-20).

6. C - "நான் இருக்கிறவராக இருக்கிறேன்" (யாத்.3:13-14).

7. A - பிலேயாம் கழுதையிடம் பேசும்படி கர்த்தர் செய்தார் (எண். 22:28)

Jesus Redeems Youth Ministries, Nalumavadi, Thoothukudi Dist - 628 211.
Cell: 9750955547 | Tel: 04639- 353535. eMail: youth@jesusredeems.org

தகவல்: மோசஸ்




ஆசரிப்புக் கூடாரம் கர்த்தர் வாசம்பண்ணவும், ஆசாரியர்கள் கர்த்தருக்கு ஊழியம் செய்யவும் ஏற்படுத்தப்பட்டவர்கள். ஆசரிப்புக் கூடாரமும் ஆசாரியர்களும் கர்த்தருக்கே உரியது. ஆசரிப்புக் கூடாரத்தை எப்படி செய்ய வேண்டும், எதைக் கொண்டு செய்ய வேண்டுமென்று கர்த்தரே மோசேக்கு சொன்னார். ஆசரிப்புக் கூடாரம் கட்ட பயன்படுத்திய சில பொருட்களைப் பற்றியும் அவைகளின் தன்மைகளைப் பற்றியும் இம்மாதம் நாம் பார்க்கலாம்.

## சீத்திம் மரம்

(சீத்திம் முட்கள்) ஆசரிப்புக் கூடாரத்தைக் கட்ட சீத்திம் மரத்தை மட்டுமே கர்த்தர் பயன்படுத்தச் சொன்னார்.

யாத். 37,38ஆம் அதிகாரங்களில் வாசிக்கும்போது சீத்திம் மரத்தினால் உடன்படிக்கைப் பெட்டி, மேஜை, தண்டு, வாசஸ்தலத்திற்கு நிமிர்ந்து நிற்கும் பலகைகள், தூண்கள், பலிபீடம் மற்றும் தூபபீடம் செய்தார்கள். சீத்திம் மரத்தினால் ஒரு பொருள் செய்தால் அது 4000 ஆண்டுகள் அப்படியே இருக்கும். பூச்சி அல்லது துரு பிடிக்காது.

சீத்திம் மரம் 12 அடி வளரக்கூடியது. இந்த மரத்தின் இலை, கிளை, தண்டு என எல்லா பாகங்களிலும் முள் இருக்கும். சாதாரண முள் அல்ல, ஒரு முள் அரை அடி நீளம் இருக்கும். காற்றில் அசையும்போது தன் சொந்த முட்களே மரத்தைக் குத்தி கிழிக்க ஆரம்பிக்கும். வனாந்திரத்தில் தண்ணீர் கொஞ்சம் கிடைக்கும், கிழிக்கும்போது அதுவும் திரவமாய் வெளிவரும். எனவே தன் ஜீவனைக் காக்க தன்னை குறுக்க ஆரம்பிக்கும். பின் கெட்டித் தன்மையாகி கடினமானதாக மாறிவிடும். முட்கள் உடைந்த அளவு மரம் strong ஆக இருக்கும்.

இந்த முள் மரம்போல உங்கள் வாழ்வில் நெருக்கங்கள், துன்பங்கள் சூழ்ந்து ஆசீர்வாதமற்ற சாபமான நிலையில் உங்கள் வாழ்க்கை உள்ளதா? சோர்ந்து போகாதீர்கள். கர்த்தர் உங்களைத் தமக்காக விசேஷமாய் பயன்படுத்தப் போகிறார்.

ஆசரிப்புக் கூடாரத்தின் பணிமுட்டுகளுக்கு பொன் வெள்ளி, வெண்கலம் ஆகியவை பயன்படுத்தப்பட்டது.



## பொன்

வாசஸ்தலத்தினுள் உள்ள பணிமுட்டுகளுக்கு மட்டுமே முக்கியமாகப் பயன்படுத்தப்பட்ட பொன், ஒரு டன்னுக்கும் சற்றும் அதிகமாக ஜனங்களால் கொடுக்கப்பட்டது. மண்ணோடு மண்ணாய் இருந்த பொன்னை பூமியிலிருந்து எடுத்துக் களிம்பு நீக்கித் தூய்மையாக்கி அக்கினியினால் உருக்கிக் கிடைப்பது பொன்னாகும். பொன் – பரிசுத்தம், சுத்தமான நிலையைக் குறிக்கிறது. அசுத்தம் நீங்கியப்



பரிசுத்தமானதை மட்டுமே தேவக்காரியத்திற்கு பயன்படுத்த முடியும்.

### பசும்பொன்

பொன்னைப் பார்க்கிலும் பசும் பொன் விலையேறப்பெற்றது. தரம் உயர்ந்தது. எனவே தேவன் பசும்பொன்னினாலே உடன்படிக்கைப் பெட்டி, கிருபாசனம், கேருபீன்கள், குத்துவிளக்கு, தூபகரண்டி, சாம்பல் பாத்திரம், தட்டு, கிண்ணங்கள், பானபலி கரங்கள், கத்திரி போன்றவற்றை செய்யச் சொன்னார்.

பொன்னை 1500டிகிரி செல்ஸியஸ் வெப்பத்தில் மீண்டும் 2ஆம் முறை உருக்குவார்கள். இது கருகும்போது எடுத்து, பின் மீண்டும் மீண்டும் வைப்பார்கள். தேவன் நம்மைப் பொன்னாக அல்ல, பசும்பொன்னாக மாற்ற விரும்புகிறபடியால் தான் நம் வாழ்வில், ஊழியத்தில் மீண்டும் மீண்டும் பாடுகள், உபத்திரவங்களை அனுமதிக்கிறார். கலங்காதீர்கள், திராணிக்கு மேலாகச் சோதிக்கப்பட விடமாட்டார்.



### தகசு தோல்

யாத்திராகமம் 26:14 தகசுத்தோல் வாசஸ்தலத்தின் மேல் மூடும்படி பாதுகாப்பிற்காகப் போடப்பட்டது. அதன் வழியாக ஒரு சொட்டு தண்ணீரும் உள்ளே போகாது. டால்பின் தோலின் உள்பகுதி இது. மகா கேவலமாயிருக்கும். இதுபோலவே நம்மைப் பாதுகாக்க இயேசுவும் சிலுவையில் அந்தக்கேடு அடைந்திருந்தார். அவருக்கு அழகுமில்லை, சௌந்தரியமில்லை (ஏசாயா 52:14). நமக்கு எந்தப் பாதிப்பும் வரக் கூடாது என்பதற்காக இயேசு நமக்காகப் பாடுபட்டார்.

### இளநீல நிறம் மற்றும் இரத்தாம்பர நூல்

செங்கடலில் காணப்படும் நத்தை மிகச் சிறிய உயிரினம். இளம் மற்றும் முதிர்ந்த நத்தைகளை தண்ணீரில் போட்டுக் கொதிக்கும்போது, இதன் சாயம் தண்ணீரில் இறங்கும். இளம் நத்தை இளநீல நிறத்தையும், முதிர்ந்த நத்தை இரத்தாம்பர நிறத்தையும் கொடுக்கும். இது ஒரு அற்பமான உயிரினம். கடலில் உப்பின் அளவு குறைந்தால் அல்லது அதிகரித்தால் மரித்து விடும். மனித பார்வையில் அற்பமானவர்கள், தேவனின் பார்வையில் விலையேறப்பெற்றவர்கள்.

**1 கொரிந்தியர் 1:27, 28**
**ஞானிகளை வெட்கப்படுத்தும்படி தேவன் உலகத்தில் பைத்தியமானவைகளைத் தெரிந்துகொண்டார்; பலமுள்ளவைகளை வெட்கப்படுத்தும்படி தேவன் உலகத்தில் பலவீனமானவைகளைத் தெரிந்துகொண்டார். உள்ளவைகளை அவமாக்கும்படி, உலகத்தின் இழிவானவைகளையும், அற்பமாயெண்ணப்பட்டவைகளையும், இல்லாதவைகளையும், தேவன் தெரிந்துகொண்டார்.**



# வரதட்சணையின் விபரீதம்!!

Heart Beat





ஆலோசனை: அனி



எனக்கு வயது 30 ஆகிறது. நான் ஒரு கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்து வளர்ந்தேன். என்னுடைய 26வது வயதிலிருந்து வரன் பார்க்கிறார்கள். என்னுடைய பெற்றோர் Business செய்து கொண்டிருக்கிறார்கள். எங்களுக்கு நிறைய சொத்துக்கள் இருப்பதினால், எங்கள் statusக்கு ஏற்றது போலப் பெண் பார்க்கிறார்கள். ஆனால் நான் ஒரு வாலிபர் கூடுகைக்கு சென்றபோது, அங்கு, ''கிறிஸ்தவர்கள் வரதட்சணை வாங்கக் கூடாது, பணம், அழகு, ஆடம்பரம் இவற்றைவிட, இரட்சிப்பின் அனுபவம் கொண்ட ஜெபிக்கின்ற பெண் வேண்டும்'' என்று ஜெபியுங்கள் என்று சொன்ன வார்த்தை என் இருதயத்தில் ஆழமாகப் பதிந்தது. நான் அங்கேயே ஒரு தீர்மானம் எடுத்தேன். நான் என் பெற்றோரிடம் ''வரதட்சணை வாங்காமல் திருமணம் செய்ய வேண்டும், வெளிப்புற தோற்றத்தைவிட, இரட்சிக்கப்பட்ட ஜெபிக்கின்ற குணசாலியான பெண் தான் உண்மையான ஆசீர்வாதம், பொக்கிஷம் என்றும், அவள் தான் தேவ ஆலோசனை பெற்றுத் தேவனுக்கு பிரியமானபடி குடும்பத்தை நடத்த முடியும்'' என்றும் சொன்னார்கள். ஆனால் அவர்கள், ''அப்படி வரதட்சணை வாங்கவில்லை என்றால் பையனுக்கு ஏதோ குறை என்று ஊர் பேசும், நம்முடைய statusக்கு வாங்குவது தப்பு இல்லை'' என்று ஆணித்தரமாகச் சொல்லிவிட்டார்கள். என் பெற்றோர் என்னைப் புரிந்து கொள்ளவில்லை என்ற வருத்தமும், மேலும் பணம், status, ஆடம்பரம் என்று அனுதினமும் அவர்கள் யோசிப்பது எனக்கு வேதனையாக இருக்கின்றது. எனக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. என்னுடைய திருமணமும் தடையாகிக் கொண்டே இருக்கிறது. – ரிச்சர்ட், ஒசூர்.

அன்பு தம்பி ரிச்சர்ட், உங்களுடைய வேதனையும், எடுத்த தீர்மானத்தில் நிலைத்து நிற்க முடியவில்லை என்ற வருத்தமும் நன்கு புரிகிறது. ரிச்சர்ட், நீங்கள் எடுத்த அழகான தீர்மானத்திற்காகத் தேவனை துதிக்கிறேன்.

திருமணம் என்று சொல்லும்போது, தேவன் எதிர்பார்க்கிற காரியம் வேறு, மனிதர்களின் எதிர்பார்ப்புகள் வேறு. தம்முடைய சித்தத்தை கணவன் மனைவி இருவரும் இணைந்து நிறைவேற்றுவார்கள், தேவன் விரும்புகிற இயேசுவின் குடும்பமாகச் சாட்சியாக வாழ்ந்து, அநேகருக்கு ஆசீர்வாதமாய் இருப்பார்கள் என்பது தான் தேவனுடைய எண்ணம். மேலும் தேவ பக்தியுள்ள சந்ததி உருவாகக் காரணமாக இருந்து, தேவ சித்தத்தை முழுவதுமாகச் செய்கின்றவர்களாக இருப்பார்கள் என்பதே தேவனின் எதிர்பார்ப்பு. இத்திட்டத்தை நிறைவேற்ற இரட்சிக்கப்பட்ட மணமகன், மற்றும் மணமகள் இருவரும் இணைந்து ஜெபித்து இயேசுவின் துணையோடு இல்லற வாழ்க்கையை இன்பமாய் வாழ வேண்டும்.



ஆனால் நம் சமுதாயத்தில் அநேக நேரம் தவறான காரியத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. நல்ல வேலை, நல்ல சம்பளம், வசதியான குடும்பம், அழகாக இருக்க வேண்டும், இத்தனை சவரன் நகை போட வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள். இவையெல்லாம் தேவை. ஆனால், குடும்பத்தைக் கட்டுவதற்கு அவசியம் என்ன என்பதை மறந்து இப்படி ஒருசில காரியத்திற்கு முக்கியத்துவம் கொடுப்பதால், பல திருமணங்கள் விவாகரத்திலும், பிரிவினையிலும், காவல்துறையிலும், நீதிமன்றங்களிலும் ஆணவக் கொலைகளிலும், வரதட்சணைக் கொடுமையிலும் தான் முடிகிறது.

இன்றைய செய்தித்தாள்களிலும், தொலைக்காட்சி செய்திகளிலும் திருமணங்களின் விபரீதங்கள் ஒவ்வொரு நாளும் வந்துகொண்டே தான் இருக்கிறது. ஏழை, நடுத்தர குடும்பம் என்று இல்லாமல், உயர்ந்த வசதியான குடும்பத்திலும் இந்த வரதட்சணை என்ற கொள்ளைநோய் பல இளம் பெண்களின் உயிரைக் குடித்துக் கொண்டே தான் இருக்கிறது.

வரதட்சணை நாங்கள் கேட்கவில்லை, மணமகளின் பெற்றோர் அவர்கள் மகளுக்குக் கொடுக்கிறார்கள், மேலும் கொடுப்பது அவர்களுக்குக் கௌரவம் என்றும், வாங்கவில்லை என்றால் நமக்கு அவமானம் என்ற ஒரு பொய்யான போர்வையில் வாழ்ந்துக் கொண்டிருக்கிறது நம்முடைய சமுதாயம். உடன்கட்டை ஏறுதல், சாதி ஒழிப்பு, தீண்டாமை போன்ற காரியங்களின் வரிசையில் இந்த வரதட்சணை பாவம் நம்மைவிட்டு எப்பொழுது பிரியும், எப்பொழுது ஒழியும் என்றே தெரியவில்லை. ரிச்சர்ட், உங்களைப் போன்றவர்கள் எடுக்கும் அழகிய தீர்மானம், அநேகருக்கு ஒரு புதிய துவக்கமாக இருக்கும் என்று நினைக்கிறேன்.

## உங்கள் அழகிய தீர்மானத்தில் நிலைத்து நின்றால் என்ன நன்மை நடக்கும்:

- ஒருவேளை உங்கள் குடும்பத்தில் உள்ளவர்கள், உறவினர்கள் உங்களைப் பழிக்கலாம், பகைக்கலாம். ஆனால் உங்கள் உயர்வான எண்ணத்தைப் பார்த்துச் சீக்கிரம் புரிந்து கொண்டு மனம்மாற வாய்ப்பு உண்டு.

- உங்களைப் பார்த்து அநேக இளைஞர்கள் இது போன்ற உறுதியான தீர்மானம் எடுக்க உதவும். இதனால் சமுதாயத்தை விட்டு இந்த வரதட்சணை என்ற கொள்ளை நோய்க்கு ஒரு நிரந்தர முற்றுப்புள்ளி வைக்கலாம்.

- இதை அறியும் கிறிஸ்தவ சமுதாயம், இந்தப் பாவச் செயலிலிருந்து தங்களை மீட்டுக்கொள்ள வாய்ப்பு உண்டு.

- ஏழை முதல் பணக்கார குடும்பம்வரை இந்தக் கொள்ளை நோயால் பல இளம் பெண்கள் பாதிக்கப்பட்டு, பல இளம் பெண்கள் இளம் வயதிலேயே மரித்துப் போகும் அவல நிலை மாறி அவர்கள் வாழ்க்கை மலர வாய்ப்பு உண்டு.

- உங்களைப் போல மனந்திரும்புகிற வாலிபர்களால், தேவன் விரும்பும் திருமணங்கள் அரங்கேறும். பூமியில் உள்ளவர்கள் மாத்திரம் அல்ல, பரலோகமும் சந்தோஷப்படும் என்பதில் சந்தேகம் இல்லை.

## ஒருவேளை இந்த வரதட்சணை வேண்டும், என்று பெற்றோரோடு இணைந்து தவறு செய்தால்...

- நீங்கள் எடுத்த தீர்மானத்தில் நிலைத்து நிற்க முடியவில்லையே என்ற வேதனையோடும் தேவனுடைய சித்தத்துக்கு மாறாகச் செயல்பட்டுவிட்டோமே என்ற குற்ற மனப்பான்மையோடும் வாழ்ந்துக் கொண்டிருக்க வேண்டும்.

- இயேசு விரும்பும் ஒரு வாழ்க்கைத் துணைக்கு பதிலாகப் பாவ உலகத்தையும், பணத்தையும், அநித்தியமான பாவ சந்தோஷத்தையும் விரும்பும் வாழ்க்கைத் துணை கிடைக்கலாம். இதனால் குடும்பத்தில் தேவையில்லாத பிரச்சனைகளும், குழப்பமும் ஏற்படலாம்.

- உலகத்துக்கு முக்கியத்துவம் கொடுப்பதால், தேவ சித்தத்தை செய்யும் குடும்பமாக இல்லாமல், சுயமாய் எல்லாவற்றையும் செய்யும்போது, பல இன்னல்களையும், துன்பங்களையும் சந்திக்க வாய்ப்பு உண்டு.

*“நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்” (ரோமர் 12:2) என்ற வசனத்தின்படி உலகம் போகும் போக்கில் போகாமல் அவருடைய சித்தத்தை அறிந்து, யோசித்து செயல்படுங்கள். உங்களின் தீர்மானம் மிகவும் முக்கியமானது. உலகத்தோடு ஒத்து போகப் போகிறீர்களா? அல்லது எதிர்நீச்சல் செய்யப் போகிறீர்களா?*

*முடிவு உங்கள் கையில்!!! தேவன் உங்களோடு இருந்து பெரிய காரியங்களைச் செய்வாராக!!*

# Revival IGNITERS Monthly Fellowship

வாலிபர்கள் தங்களுடைய ஆவிக்குரிய வாழ்வில் அனல் கொண்டு எழும்பவும், வேதத்தின் ஆழமான இரகசியங்களை அறியவும், தங்கள் தேசத்திற்காய் கூடி ஜெபித்து பெலப்படும் ஓர் இடமாகவும் IGNITERS கூடுகை அமைகிறது. நீங்களும் இக்கூடுகையில் பங்குபெற்று பெலன் அடையலாமே! உன்னை பெலப்படுத்திக் கொண்டு, பிறரையும் பெலப்படுத்த ஆயத்தப்படு! ஆயத்தப்படுத்து!

## EVERY 1ST SUNDAY (2ND NOV)

**MUMBAI – DHARAVI (5PM – 7:30PM)**
World Revival Prayer Centre, 2nd Floor, Above Balakrishna Farsan Mart, Opp. Apna Restaurant, Near Kamarajar School, 90 Feet Road, 9004882470

**VELLORE (3PM)**
World Revival Prayer Centre, Ajantha Mahal, # 3, 6th West Cross Road, Gandhi Nagar
9442885315 | 9442979556

**TIRUPUR (4PM – 6:30PM)**
World Revival Prayer Centre, #62, 2nd Floor, Benny Kumaran Main Road.
9442885315

**TUTICORIN (3PM – 5:30PM)**
World Revival Prayer Centre, Jehovah Jireh Towers, 51/8D/3, 1st Floor, Tiruchendur Road, Muniasamypuram
Land mark: South Police Station to Kamaraj College Rd.
9750955548 | 9786212103

**TIRUPATI (3PM)**
World Revival Prayer Centre, Unlimited Show Room (Opp.)
7989295442 | 9488938305

**SANKARANKOIL (2:30PM – 5PM)**
World Revival Prayer Centre, Sekihnah Mahal, Mullai Nagar.
9750955548 | 8344949555

**AMBUR (3PM-6PM)**
Concordia Hr.Sec. School, Opp Rly.Station
9597927799 | 9442885315

**THANE (5PM - 7:30PM)**
R.P. Mangala High School (Near Railway Station), Room No.10, Opp. Bank of Maharashtra, Thane (East)
9004882470

**THANJAVUR (3PM)**
World Revival Prayer Centre, Near Balaji Nagar Bus Stop, 18B, TPS Nagar, MC Road
9489775075 | 9444381971

**KOVILPATTI (2:30PM -5:30PM)**
St. Paul's Matriculation School (Parking area Building)
9677858766 | 9787322334

**ALANGULAM (2:30PM)**
D. No. 5/2, Vaanjinathan Street, North side of TPV Mill, Thuththikulam Road,
9750955548 | 9965377427

**THENI (2:30PM – 5PM)**
World Revival Prayer Centre, #203, Madurai Road, Opp. Anantham Silk, Dr. Kamaraj Hospital, 1st Floor
9750955548 | 9976766422

**SURANDAI (2:00PM)**
Jawaharlal Middle School
9443962141 | 9750955548

**SATHANKULAM (3PM -5:30PM)**
Hendry Matric Higher Secondary School, Mela Sathankulam.
9442885315 | 9786212103

**CHENGALPET (3PM – 5:30PM)**
Reheboth Church, Near old bus stand,
9710809626 |9488475315

**NAMAKKAL (3PM -5:30PM)**
World Revival Prayer Centre, 16B Naveen Nest Apartment, Podhigai Nagar, 1st street, Salem Road, Namakkal-637001
9962085523 | 94886 18305

**POLLACHI (3PM TO 6PM)**
World Revival Prayer Centre, Grace Auto, 1st floor, 163, Raja mill road, Pollachi,
9486037586 | 9487856205

**VILLUPURAM (3PM – 5:30PM)**
World Revival Prayer Centre, HH Complex, Namnadu Textiles, Opp., Shanthi Theater Rd
8870517324 | 834411022

**ERODE (4PM – 6:30PM)**
World Revival Prayer Centre, #216, 1st Floor, Near Fire Service, Gandhiji Road
9750722000

## EVERY 2ND SUNDAY (9TH NOV)

**BANGALORE (3PM-5PM)**
World Revival Prayer Centre, 57/2 Thomasappa layout (Opp) Lumbini Garden Bus Stand Outer Ring Road, Veerannapalaya (Nagavara)
9791444788 | 080 35 45 45

## EVERY 3RD SATURDAY (15TH NOV)

**MYSORE (3:30PM - 6PM)**
World Revival Prayer Center, 3818, 14th Cross, St. Mary's Road, FTS Circle, N.R. Mohalla.
9962085523 | 9886311777

## EVERY 3RD SUNDAY (16TH NOV)

**SALEM (3PM - 6PM)**
Karunya Prayer Hall,
76/67, Near Thinathanthi office,
opp. Gandhi Stadium, Arisipalayam 2.
9962085523

**TIRUNELVELI (2:30 PM)**
World Revival Prayer Centre,
Shah Complex,
#43/R4, Rajendra Nagar,
Trivandrum Road
9750955548 | 9047480484

**SIVAKASI (3PM -5PM)**
World Revival Prayer Centre,
HOREB Complex,
1st Floor, P K N Road,
(Near Rathna vilas Bus Stop)
9677858766 | 9442906567

**COIMBATORE (4 PM)**
World Revival Prayer Centre,
#90, 1st Floor,
Arts College Road,
Near Charan Tower,
9894399599 | 9442885315

**TRICHY (3 PM)**
World Revival Prayer Centre,
22A, 1st Floor,
Thennur High Road,
Near KMC Bus Stop, Thennur.
9489775075 | 8344119000

**CHENNAI (3 PM)**
World Revival Prayer Centre,
Prince Kushal Towers,
7th Floor B-Wing,
Adjacent to LIC Metro,
Mount Road,
9488475315

**NALUMAVADI (3PM -5:30PM)**
Tabernacle of God, Nalumavadi
9750955548

**JEBAMALAI (2 PM)**
Keelamathapuram, Kadaiyam (via),
Tenkasi Dist.
8300131000 | 9750955548

**TIRUVARUR (3:30PM)**
World Revival Prayer Centre,
1S.A. Rice Mill Complex,
TTP Main Rd,
9976766322 | 7373374733

**RANIPET (3PM-6PM)**
World Revival Prayer Centre,
Railway Station Road,
Zion Nagar,
Near Scudder Memorial Hospital
9500283179

**NAGERCOIL (3PM TO 6PM)**
World Revival Prayer Centre,
NO: 1055 K.P ROAD,
Milk Depot Junction, Nagercoil
7598155503 | 9750955548

**PONDICHERRY (5PM TO 7PM)**
World Revival Prayer Centre,
Kottupalayam Lawspet,
opp. Latha Steel, E C R Road.
8344433800 | 9962085523

**CHITTOOR (3PM TO 6PM)**
World Revival Prayer Centre,
Kamlambal Street, Readspet,
Kangareddy palli,
9487734603

**DELHI (3 PM TO 5 PM)**
World Revival Prayer Centre,
Plot 152, Pratap Nagar
Near Hari Nagar bus depot
New Delhi - 110064
7217663240

## EVERY 4TH SUNDAY (23RD NOV)

**THIRUVALLUR (3PM -5:30PM)**
World Revival Prayer Centre,
H S R Tower,
2nd Floor, Near CSI Gowdi Church
9488475315

**KARUR (3PM-5:30PM)**
CSI Boys High schools,
Jawahar Bazzar,
Bunglaw Street, Karur.
9489775075

**MUMBAI-MALAD (4PM – 6PM)**
Bethel Ground Floor, 305/E,
Mith Chauky,
Marve Road, Malad (W)
9664050567 | 9619996976

**PERNAMPET (3PM TO 6PM)**
Revival Prayer centre, VK Road.
9442885315

**THISAYANVILAI (2:30PM - 5:30PM)**
World Revival Prayer Centre,
Near ML Hospital, Thisayanvilai.
9487810845 | 9750955548

**MADURAI (3PM -5:30PM)**
Devanukae Mahimai Church,
Nearby MGM Plaza,
[Theekadir Busstop]
41, K.Salai pudur Byepass Road,
Madurai
9750955548

**உங்கள் பகுதியில் நடைபெறும் Fellowshipல் தவறாமல் கலந்து கொள்ளுங்கள்; எழுப்புதலைப் பற்ற வைப்போர்களாய் மாறுங்கள்!**

இயேசு விடுவிக்கிறார்
வாலிபர் உலகம்
தொலைக்காட்சி நிகழ்ச்சி

Sathiyam
சத்தியம் TVயில்
சனிக்கிழமை தோறும்
6:30 மணி
காலை 7 மணிக்கு
YouTube YouTube மற்றும் Comforter
Comforter TVயிலும் பார்க்கலாம்.

வாலிபர்களே! உங்கள் நண்பர்களுக்கும் இந்த நிகழ்ச்சியை அறிமுகப்படுத்துங்கள். அதுமட்டுமல்லாமல் இந்நிகழ்ச்சி மூலம் நீங்கள் பெற்றுக்கொண்ட ஆசீர்வாதங்களை எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள்!!
9750955547

LIVE STREAMING
Revival IGNITERS
SUNDAY 30th NOV.
Time: 3:00 PM - 5:00 pm
IGNITERS, MONTHLY YOUTH PROGRAM IS TELECASTED LIVE ONLINE IN YOUTUBE AND FACEBOOK ON THE LAST SUNDAY OF EVERY MONTH

சாதனை: சுமா கிரேஷன்

# ராக்கெட் மேன்!



அன்பான இளம் சாதனையாளர்களுக்கு என்னுடைய அன்பின் வாழ்த்துக்கள்!

**நம்மிடத்தில் ஏதோ ஒரு குறைபாடோ அல்லது நோயோ இருந்தால், பெரும்பாலும் அதையே சொல்லிச் சொல்லி நம்முடைய வெற்றிக்கு நாமே முற்றுப்புள்ளி வைக்கிறோம். ஆனால் சிலர் மட்டுமே குறைகளை வெற்றியின் துவக்கமாகக் கொண்டு வெற்றிக் காண்கின்றனர். அப்படி வெற்றிக் கண்ட சாதனையாளரின் வாழ்க்கை உங்கள் முன்.**

கேப்ரியேல்சின்ஹோ (**Gabrielzinho**) பிரேசிலின் சான்டா ரிட்டா டோ சபுகாயில் 2002 ஆம் ஆண்டு பிறந்தார். பிறக்கும்போதே **Phocomelia** என்ற குறைபாடுடன் பிறந்தார். (**Phocomelia** என்பது ஒரு அரிய பிறவி குறைபாடு ஆகும், இதில் கைகள் அல்லது கால்கள் உடலுடன் நேரடியாக இணைக்கப்பட்டு, நடுப்பகுதிகள் இல்லாமல் மிகக் குறுகலாகக் காணப்படும்). அதனால் கேப்ரியலின் கைகள் முற்றிலும் இல்லாமல், கால்களும் வளர்ச்சி இல்லாமல் மிகச் சிறியதாக இருந்தது. இவரைப் பார்த்த அனேகர் இந்தக் குழந்தையால் மற்றவர்களைப் போல் சாதாரணமாக வாழ முடியாது என்று எண்ணினார்கள். வறுமை மற்றும் உடல் குறைபாடு ஆகிய இரட்டைச் சவால்களைச் சந்தித்த கேப்ரியேலுக்கு தினசரி வாழ்வின் எளிய செயல்களைச் செய்வதே கடினமாக இருந்தது. இருந்தாலும், அவரது தாயார் ''எனது மகன் சாதாரண வாழ்க்கையை நடத்த முடியும், அதைவிட உயர்ந்த வாழ்க்கையையும் வாழ முடியும்'' என்ற நம்பிக்கையோடு எப்பொழுதும் இவரை ஊக்குவித்து வளர்த்தார்.

கேப்ரியேலுக்கு கைகள் இல்லாவிட்டாலும், நான்கு அல்லது ஐந்து வயதிற்குள்ளேயே நீச்சல் கற்றுக் கொண்டார். இவருடைய 13வது வயதில் அவரது பள்ளியின் உடற்கல்வி ஆசிரியர், இவருக்குத் தெரியாமலே, நீச்சல் போட்டியில் இவரது பெயரைப் பதிவு செய்தார். ஆச்சரியமாக, அந்தப் போட்டியில் கேப்ரியேல் மூன்று தங்கப்பதக்கங்கள் வென்றார். அதுவே அவரது வெற்றிப் பயணத்தின் முதல் படி. இதன்பின் நீச்சல் பயிற்சியில் அதிக ஈடுபாடு காட்டத் தொடங்கினார். கைகள் இல்லாமல் நீந்துவது சாத்தியமற்றது போலத் தோன்றினாலும், கேப்ரியேல் தன் இடுப்பையும் கால்களையும் பயன்படுத்தி டால்பின் போல் நீரில் நீந்தத் துவங்கினார்.



**Cruziero** என்ற பிரபல கிளப்பில் பயிற்சி பெறத் தொடங்கினார். அங்குள்ள வீரர்கள் மற்றும் பயிற்சியாளர்கள் அவருக்கு மிகுந்த ஆதரவு அளித்தனர். வாரத்தில் ஆறு நாட்கள், தினமும் பல மணி நேரம் பயிற்சி செய்து, தன் உடலை வலுப்படுத்திக் கொண்டார். சிறு வெற்றிகள் அவரை ஊக்கப்படுத்த, பெரிய கனவுகள் அவரை முன்னோக்கி நகர்த்தின.



- 2019ல் பெரு நாட்டில் நடந்த Parapan America Gamesல் அவர் தங்கம், வெள்ளி, மற்றும் வெண்கலம் வென்று பிரெசிலின் பெயரை உயர்த்தினார்.
- 2020ல் டோக்கியோ பாரா ஒலிம்பிக்கில் இரண்டு தங்கம், ஒரு வெள்ளி வென்று உலக அரங்கில் புகழ்பெற்றார்.
- 2024 பாரிஸ் பாராலிம்பிக்கில் மூன்று தங்க பதக்கங்களை வென்று ராக்கெட் மேன் என்ற பெயரால் புகழப்பட்டார். ஆடவருக்கான எஸ்2 பிரிவில் 200 மீட்டர் ப்ரீஸ்டைல் போட்டியில் கேப்ரியேல் பந்தைய தூரத்தை 3:58:92 விநாடிகளில் கடந்து தங்கப் பதக்கம் வென்றார். 100 மற்றும் 50 மீட்டர் பேக்ஸ்ட்ரோக் (Backstroke) போட்டிகளிலும் கேப்ரியல் பதக்கங்களை வென்று குவித்து உள்ளார்.

இன்று, கேப்ரியேல்சின்ஹோ ஒரு உலகப்புகழ் பெற்ற பாராலிம்பிக் நட்சத்திரமாக இருக்கிறார். அதோடு, அவர் செய்தியியல் (Journalism) மாணவராகவும் தனது கல்வியைத் தொடர்ந்து வருகிறார். லாஸ் ஏஞ்சல்ஸ் இல் நடைபெறவுள்ள 2028 பாராலிம்பிக்கில் பங்குபெறுவதே இவரின் அடுத்த இலக்காக உள்ளது..

**இதை வாசிக்கும் நண்பர்களே, உடல் குறைபாடு ஒரு தடையல்ல, மன உறுதியின்மை தான் உண்மையான தடையாகும். நம்மால் செய்யக்கூடிய சாதாரண வேலைகளைக் கூட அவரால் செய்ய முடியாத போதும் அதை ஒரு பொருட்டாக எண்ணாமல், மன உறுதி கொண்டு ஊக்கத்தின் சின்னமாக உலகம் முழுவதும் பாராட்டப்படுகிறார். சற்று சிந்தியுங்கள், குறைபாடு உங்களிடம் எங்கே உள்ளது? மனதிலா அல்லது உடலிலா?**



## எறும்பின் திறன்கள் மற்றும் சிறப்பம்சங்கள்

- எறும்புகள் தங்கள் சொந்த உடல் எடையைவிட 10 முதல் 50 மடங்கு அதிக எடையைச் சுமக்கும் பெலன் கொண்டது.
- எறும்புகள் அங்கும் இங்கும் ஓடுவதுபோல்தான் இருக்கும். ஆனால் அவை திட்டமிட்டு செயல்படும்.
- எந்த ஒரு எறும்பும் சும்மா இருந்துவிட்டு மற்றவர்கள் செய்யட்டும் என்று இராமல், அனைத்து எறும்புகளும் முழு ஈடுபாடுடன் திறமையாக செயல்படும்.
- தங்களுக்கு பிரபு, தலைவன், அதிகாரி இல்லாதிருந்தும் அவைகள் ஒரே வரிசையில் செல்லும், காரணம் எறும்புகள் ஒழுங்கைக் கையாளும்.

நீதிமொழிகள் 6:6-8; 10:4,5; 13:4



# வாலிபர் எழுப்புதல் கூடுகை

கடந்த செப்டம்பர் 7ஆம் தேதி **விழுப்புரத்திலும்**, அக்டோபர் 2ஆம் தேதி **தஞ்சாவூரிலும்**, வாலிபர் எழுப்புதல் கூடுகைகள் நடத்த தேவன் கிருபை செய்தார். இந்த எழுப்புதலின் நாட்களில் வாலிபர்கள் வைராக்கியமாய் எழுப்புதல் அக்கினியை பரவச் செய்கிறவர்களாய் எழும்ப, சுமார் **521 வாலிபர்களைத்** தேவன் கொண்டு வந்து அபிஷேகித்து, வல்லமை வரங்களைக் கொடுத்து ஆசீர்வதித்து அனுப்பினார். வந்திருந்த வாலிபர்கள் தீர்க்கதரிசன வரங்களைப் பெற்று, வரும் காரியங்களை அறிந்துகொள்ள தேவ சமூகத்தில் காத்திருந்து ஜெபிக்க ஒப்புக்கொடுத்துக் கடந்து சென்றனர். இக்கூடுகைகளில் தேவன் தம்முடைய ஊழியர்களை வல்லமையாகப் பயன்படுத்தினார். **தேவனுக்கே மகிமை!**



தகவல்: ஜ்யூக் ரிச்சர்ட்

# இது இல்ல TRENDU...!

ஹலோ பிரண்ட்ஸ்! எப்படி இருக்கீங்க? ஒவ்வொரு மாதமும் வாலிபர்களைத் திசை திருப்புகிற Trendy ஆன காரியங்களை இந்தப் பகுதியில் பார்த்து வருகிறோம். இந்த மாதம் trend என்கிற பெயரில் நம்மை வழிவிலக செய்கிற மற்றொரு காரியத்தைப் பற்றிப் பாப்போம். வாலிபர்களாகிய நாம் மற்றவர்களைக் கவர்ந்திழுப்பதற்காகச் செய்கிற சில காரியங்கள், நம்மை அறியாமலேயே தவறிவிட செய்கிறது. தற்போது வாலிபர்கள் மத்தியில் வேரூன்றுகிற ஒரு காரியம், எதற்கெடுத்தாலும் நண்பர்களோடு சேர்ந்து Celebrations, Parties மற்றும் Travel. இப்படிப்பட்ட காரியங்கள் ஜாலியாக இருந்தாலும் வீண் செலவிற்கும், சரீரம் மற்றும் ஆத்துமா பலவீனமடையவும் செய்கிறது. சில நேரங்களில் வரம்பு மீறப்படும்போது, அது வாலிபர்களின் எதிர்காலத்தைப் பாழாக்குகிறது.

வேதத்தில் கொண்டாட்டங்களைக் குறித்து எழுதப்பட்டுள்ளது. யோபுவின் பிள்ளைகள் தங்களது பிறந்த நாட்களை விசேஷமாகக் கொண்டாடினார்கள், ஆனால் யோபு கொண்டாட்டங்கள் முடிந்தவுடன் தனது பிள்ளைகள் பாவம் செய்திருக்ககூடும் என எண்ணி, கர்த்தருக்கு பலியிட்டுப் பிள்ளைகளைச் சுத்திகரித்தார். அது ஒரு பாதுகாப்பின் வளையத்திற்குள் இருந்தது. ஆனால் யாக்கோபின் மகளாகிய தீனாள் சீகேமை சுற்றி பார்க்கப்போய் பாதுகாப்பின் எல்லைக்கு வெளியே போனதால் தனது கற்பை இழந்து போனாள்.

வேதத்தில் பார்க்கிறோம், “கண்காணிப்பை விரும்புகிறவன் நல்ல வேலையை விரும்புகிறான்” (1 தீமோ. 3:1). பொதுவாக வாலிபர்கள் கண்காணிப்பை விரும்புகிறதில்லை, இன்னும் தெளிவாகக் கூறவேண்டுமானால், அடங்கி இருக்க விரும்பமாட்டோம். ஆனால் 1 பேதுரு 5:5,6ல் அப்போஸ்தலனாகிய பேதுரு இளைஞர்கள் அடங்கி இருக்க வேண்டும் எனக் கூறுகிறார். யோசேப்பு என்கிற வாலிபன் தன்னை தேவன் கண்காணிக்கிறார் என்ற உணர்வோடு செயல்பட்டதால் ஜெயத்தைப் பெற்றுக்கொண்டார். கொண்டாட்டங்கள் கண்காணிப்போடு, கட்டுபாடுகளோடு இருக்கும்போது, வாலிபர்களுக்கு ஆசீர்வாதம். மாய கண்ணிகளுக்குத் தப்பலாம்.

ஞானியாகிய சாலொமோன் தனது வாக்கியத்தில், “வாலிபனே! உன் இளமையிலே சந்தோஷப்படு, உன் வாலிப நாட்களிலே உன் இருதயம் உன்னைப் பூரிப்பாக்கட்டும்; உன் நெஞ்சின் வழிகளிலும், உன் கண்ணின் காட்சிகளிலும் நட; ஆனாலும் இவையெல்லாவற்றினிமித்தமும் தேவன் உன்னை நியாயத்திலே கொண்டுவந்து நிறுத்துவார் என்று அறி” (பிரசங்கி 11:9) என்று கூறுகிறார். தற்காலத்தில் சந்தோஷத்தை வெளிப்படுத்தக் களியாட்டுகளுக்கு திசை திரும்பி அதுதான் Trend எனக் கூறும் வாலிபகூட்டமே! சிந்தித்துபார்! நீ போகிற வழி உனக்குப் பூரண சமாதானத்தை சந்தோஷத்தைக் கொடுக்கிறதா? அற்ப நேர சந்தோஷத்திற்காக, உனது எதிர்காலத்தை, உனது நித்திய ஜீவனை இழந்துவிடாதே!

**உனது வாழ்கையை பாழாக்கும் மாய்மாலங்களை விட்டு விலகி, நித்திய சந்தோஷத்தைத் தரும் நற்காரியங்களை உனது Trend ஆக மாற்று. நித்திய சமாதானத்தை தரும் இயேசு கிறிஸ்துவை வெளிப்படுத்தும் காரியங்களை உனது Trend ஆக மாற்று. ஏனெனில் இந்த உலகத்தை ஜெயித்தவர் அவர் ஒருவர் மாத்திரமே (யோவான் 16:33).**



நிகழ்வு: ஜெயசீலன்

# நான் ஒரு ஜெப வீரன்

*I am a Prayer Warrior.*



## இயேசுவின் ஜெப வாழ்வு

பரலோகத்தில் பிதாவுக்கு சமமானவராய் இருந்த இயேசு கிறிஸ்து, பூமியில் மனுஷரூபமாக வந்தபோது, எல்லா நேரத்திலும் தம் பிதாவை நோக்கி ஜெபித்தவராகக் காணப்பட்டார். அவர் நமக்கு எல்லாவற்றிலும் முன்மாதிரியாய் இருந்ததுபோல, ஜெபத்திலும் ஒரு சிறந்த முன்மாதிரியை விட்டுச் சென்றார்.

தன்னுடைய ஜெப வாழ்வில் இயேசுக்கிறிஸ்து எப்படி நமக்கு முன்மாதிரியை வைத்துப் போனார் என்பதை அறிய இயேசு எப்படியெல்லாம் ஜெபித்தார் என்பதை இப்பகுதியில் நாம் பார்க்கலாம்.

### 1. சாயங்கால ஜெபம்

**“அவர் ஜனங்களை அனுப்பிவிட்ட பின்பு, தனித்து ஜெபம்பண்ண ஒரு மலையின்மேல் ஏறி, சாயங்காலமானபோது அங்கே தனிமையாயிருந்தார்”** (மத். 14:23).

இயேசு பகல் முழுவதும் ஜனங்கள் மத்தியில் நடந்து திரிந்து ஊழியம் செய்த போதும் சில வேளைகளில் தனிமையைத் தேர்ந்தெடுத்து, பிதாவுடன் ஆழமான ஐக்கியத்தில் ஜெபித்தார். இது நமக்கு ஒரு முன்மாதிரி.

### 2. அதிகாலை ஜெபம்

**“அவர் அதிகாலையில், இருட்டோடே எழுந்து புறப்பட்டு, வனாந்தரமான ஓரிடத்திற்குப் போய் அங்கே ஜெபம்பண்ணினார்”** (மாற்கு 1:35).

அதிகாலையில் என்னைத் தேடுகிறவர்கள் என்னைக் கண்டடைவார்கள் (நீதி. 8:17) என்ற வார்த்தைக்குக் கீழ்ப்படிந்தவராய் இயேசு அதிகாலையில் பிதாவுடன் சஞ்சரிப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தார்.

### 3. இரவு முழுவதும் ஜெபம்

**“அந்நாட்களிலே, அவர் ஜெபம்பண்ணும்படி ஒரு மலையின்மேல் ஏறி, இராமுழுவதும் தேவனை நோக்கி ஜெபம்பண்ணிக் கொண்டிருந்தார்”** (லூக்கா 6:12).

12 சீஷர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு முன் இயேசு இரவு முழுவதும் ஜெபித்தார். முக்கிய முடிவுகளை எடுப்பதற்கு முன்பு ஜெபம் மிக அவசியம் என்பதை இது காட்டுகிறது.

### 4. மலைமீது ஜெபம்

**“அவர் ஜனங்களை அனுப்பிவிட்ட பின்பு, ஜெபம்பண்ணும்படி ஒரு மலையின் மேல் ஏறினார்”** (மாற்கு 6:46).

ஐயாயிரம் பேருக்கு உணவு அளித்த பிறகும் இவ்வளவு பெரிய அற்புதம், நம்மைக் கொண்டு நடந்ததே என்று இயேசு திருப்தி அடைந்து விடாமல், தனிமையைத் தேடி மலையில் ஜெபம் செய்தார். தனிமை, தேவனோடு உள்ள ஆழமான உறவை வலியுறுத்துகிறது.



## 5. வனாந்தரத்தில் ஜெபம்

''அவரோ வனாந்தரத்தில் தனித்துப்போய், ஜெபம் பண்ணிக்கொண்டிருந்தார்'' (லூக்கா 5:16).

சாத்தானின் சோதனைகளை எதிர்கொள்வதற்கு முன், 40 நாட்கள் உபவாசத்துடன் ஜெபித்தார். தனிமையில் ஜெபம் செய்வதன் மூலம் தேவனிடமிருந்து வலிமையை பெற்றார்.

## 6. சீஷர்களோடு ஜெபம்

**"அவர் தமது சீஷரோடேகூடத் தனித்து ஜெபம் பண்ணிக்கொண்டிருக்கையில்..."** (லூக்கா 9:18).

சிலுவைக்குச் செல்லும் முன், பிரதான ஆசாரிய ஜெபத்தில், தம் சீஷர்களுக்காக ஜெபித்தார். அவர்களோடு ஜெபிப்பதன் மூலம், அவர்களின் விசுவாசம் நிலைக்க வேண்டுமெனக் கேட்டார்.

## 7. ஊக்கமுள்ள ஜெபம்

''அவர் மிகவும் வியாகுலப்பட்டு, அதிக ஊக்கத்தோடே ஜெபம்பண்ணினார்; அவருடைய வேர்வை இரத்தத்தின் பெருந்துளிகளாய்த் தரையிலே விழுந்தது'' (லூக்கா 22:44).

கெத்சேமனே தோட்டத்தில், தாம் அடையப்போகும் சிலுவையின் வேதனையை எதிர்நோக்கியபோதும், பிதாவின் சித்தத்திற்கு கீழ்ப்படியும் மனப்பான்மையோடு ஜெபித்தார்.

## 8. விடாப்பிடியான ஜெபம்

**"என் பிதாவே, இந்தப் பாத்திரத்தில் நான் பானம்பண்ணினாலொழிய இது என்னைவிட்டு நீங்கக்கூடாதாகில், உம்முடைய சித்தத்தின்படி ஆகக்கடவது. அவர் மறுபடியும் அவர்களை விட்டுப்போய், மூன்றாந்தரமும் அந்த வார்த்தைகளையே சொல்லி ஜெபம்பண்ணினார்"** (மத். 26:42,44).

இந்தப் பகுதியில் ஒரே விஷயத்திற்காக 3 முறை இயேசு ஜெபித்ததை பார்க்கிறோம். இதன் மூலம் ஒரு காரியத்திற்காக மீண்டும் மீண்டும் ஜெபிப்பது தேவ சித்தத்திற்கு நம்மை அர்பணிப்பதற்கு அடையாளம் என்று இயேசு காட்டினார்.

## 9. முகங்குப்புற விழுந்து ஜெபம்

**"சற்று அப்புறம்போய், முகங்குப்புற விழுந்து... என் சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது என்று ஜெபம்பண்ணினார்"** (மத். 26:39).

இங்கு, அவர் தம் சுயவிருப்பத்தை விடப் பிதாவின் சித்தத்தை நிறைவேற்றத் தன்னை முற்றிலும் அர்ப்பணிக்கும் விதமாக முகங்குப்புற விழுந்து தம்மை வெறுமையாக்கும் மனப்பான்மையை வெளிப்படுத்தினார்.

## 10. கண்ணீரோடும் உரத்த சத்தத்தோடும் ஜெபம்

**"தம்மை மரணத்தினின்று இரட்சிக்க வல்லவரை நோக்கிப் பலத்த சத்தத்தோடும் கண்ணீரோடும் விண்ணப்பம்பண்ணி, வேண்டுதல் செய்தார்"** (எபி. 5:7). லாசருவின் மரணத்தையும், எருசலேமின் அழிவைப் பற்றி அறிந்தபோதும், இயேசு கண்ணீரோடு ஜெபித்தார்.

*அன்பான வாலிபர்களே,,,! இயேசுவின் வாழ்வை நாம் கவனித்தால். அவரின் ஊழியத்தின் ரகசியம் ஜெப வாழ்வே என்பது நமக்குப் புரிகிறது, அவர் மக்கள் கூட்டங்களில் பிரசங்கித்தார். அற்புதங்கள் செய்தார். ஆயிரங்களுக்கு உணவு அளித்தார் — ஆனாலும். எல்லாவற்றையும் பிதாவின் சித்தத்தின்படியே செய்யவும். அவருடனான உறவில் வளரவும் ஜெபத்தில் தன்னுடைய பிரதானமான நேரத்தை ஒதுக்கினார்,*

☞ கடைசிகால எழுப்புதலில் நிற்கும் வாலிபனே, உனக்கு ஒரு சவால்!

☞ அதிகாலையில் போன் எடுக்கும் முன், தேவனை நாடுவாயா?

☞ முக்கியமான முடிவுகளை எடுப்பதற்கு முன், முழு இரவு ஜெபிக்கத் தயாரா?

☞ உன் வியாகுலத்தையும் கண்ணீரையும் ஜெபமாக மாற்றுவாயா?

☞ தனிமையில் தேவனோடு பேசும் பழக்கத்தை வளர்ப்பாயா?

இயேசு "ஒரு மணி நேரமாவது என்னோடேகூட விழித்திருக்கக்கூடாதா?" (மத்,26:40) என்று சீஷர்களை பார்த்துக் கேட்டார், இன்று அந்தக் கேள்வி உன்னையும் என்னையும் நோக்கி வருகிறது, இன்றிலிருந்து உன் ஜெப வாழ்வை ஒரு புதிய நிலைக்கு உயர்த்த உன்னை அர்ப்பணி,

☞ உன் அறையை ஜெப அறை ஆக்கு.

☞ உன் தனிமையை தேவனுடனான நேரம் ஆக்கு.

☞ உன் கண்ணீரை வல்லமையான ஜெபமாக மாற்று.

அப்பொழுது, நீயும் இயேசுவைப் போலத் தேவ சித்தத்தில் உறுதியாக நிற்பவனாக, தேவனின் பெலனுடன் வாழ்பவனாக இருப்பாய்.!!

கிறிஸ்தவ செய்திகள்: ஜெனிபர்

# பரபரப்பு செய்திகள்



Hi friends, எல்லாரும் எப்படி இருக்கீங்க? ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்களுக்கு என் அன்பின் வாழ்த்துக்கள். பரபரப்பு செய்திகள் என்னும் தொடரில் உங்களை மீண்டும் சந்திப்பதில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.



**வேதத்தில் தேவன் ஆபிராமை பார்த்து நீ எழுந்து தேசத்தின் நீளமும் அகலமும் எம்மட்டோ, அம்மட்டும் நடந்து திரி; உனக்கு அதைத் தருவேன் என்றும், யோசுவாவை நோக்கி, உங்கள் காலடி மிதிக்கும் எவ்விடத்தையும் உங்களுக்குக் கொடுத்தேன் என்று கூறியதையும், இயேசுவானவர் நன்மை செய்கிறவராய் சுற்றித் திரிந்ததையும், அதன் மூலம் அநேக அற்புத அடையாளங்கள் நடந்ததையும் பார்க்கிறோம். இவர்களைத் தேவன் தேசமெங்கும் நடக்க சொன்னதையும் அதன் விளைவாய் தேசங்களையும், பட்டணங்களையும், ஜனங்களையும் சுதந்திரமாக இவர்களுக்குக் கொடுத்ததையும் நாம் வேதத்தில் பார்க்கிறோம். இவைகள் prayer walkற்கு முன்னோடியாக உள்ளது.**

**இன்றும் prayer walk மூலம் அற்புதங்கள் நடக்குமா? ஜனங்களும், பட்டணங்களும் சுதந்தரிக்கப்படுமா? என யோசித்து கொண்டிருந்தபொழுது தான், நம் தமிழ்நாட்டின் ஒரு சில பகுதிகளிலிருந்து பரபரப்பான செய்திகள் நமக்குக் கிடைத்துள்ளதன.**

ஒரு சகோதரி ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமைகளில் ஆலயத்திற்கு போகும் வழியில் ஒரு குறி சொல்லும் கோயில் இருப்பதைக் கண்டு இருதயத்தில் பாரம் கொண்டார். ஒவ்வொரு முறையும் அந்தப் பகுதியில் செல்லும்பொழுது அதற்காக வைராக்கியமாக ஜெபிக்க ஆரம்பித்தார். அந்தச் சகோதரி ஜெபிக்க ஜெபிக்க ஒரு மாற்றம் வந்தது. ஆனால் அந்த மாற்றம் மேலும் அந்தச் சகோதரியின் இருதயத்தில் பாரத்தைக் கொடுத்தது. என்னவென்றால் அந்தக் குறி சொல்லும் இடம் வளர்ந்து அநேக மக்கள் வருகிற பிரபலமான இடமாய் மாறிவிட்டது. இந்தச் சகோதரிக்கு ஒரு கவலை, ஆண்டவரே இந்தப் பகுதிக்கு வரும் பொழுதெல்லாம் நான் ஜெபிக்கிறேன். இது இவ்வளவாய் வளர்ச்சி அடைந்து விட்டதே என்று வருந்தினார். ஆனாலும் அவர்கள் ஜெபத்தை விடவில்லை.

இன்னும் தீவிரமாக ஒவ்வொரு முறையும் அந்த இடத்தைப் பார்த்து ஜெபித்தார்கள். என்ன ஆச்சரியம்! ஒரு சில நாட்களில் அந்த இடமே அங்கு இல்லை; அந்தக் கட்டிடங்கள் இடிக்கப்பட்டு கடைகளாக மாறியது. இதற்குப் பின் அவர்களது சபைக்கு அநேக புதிய ஆத்துமாக்கள் வந்தனர்.



மற்றும் ஒரு பகுதியில் ஒரு குழுவினர் ஜெபநடை மற்றும் சுவிசேஷ ஊழியத்தை செய்து கொண்டிருந்தனர். அவர்கள் ஒரு கிராமத்தின் வழியே நடந்து கொண்டிருக்கையில், ஒரு வயதான தாத்தா குச்சியின் உதவியோடு நடந்து கொண்டிருந்தார். அந்தக் குழுவில் இருக்கும் இரண்டு சகோதரர்கள் அந்தத் தாத்தாவிடம் பேசினர். இயேசுவைப் பற்றியும், அவர் செய்யும் அற்புதங்களையும் கூறி, அந்த இடத்திலேயே அந்தத் தாத்தாவிற்காக ஜெபித்தனர். நடந்தது என்னவென்றால், அந்த ஜெபத்திற்கு பிறகு அந்தத் தாத்தா குச்சியின் உதவி இல்லாமல் நடக்க ஆரம்பித்தார். அந்தக் குழுவினர் தேவனை மகிமைப்படுத்தினர். அதற்குப் பின்னர் அவர் போகும் வழி எல்லாம் இயேசுவால் தான் இது நடந்தது, அவர்தான் என்னைக் குணப்படுத்தினார் என்று கூற ஆரம்பித்தார். அந்தக் குழுவினர் சென்ற அந்தக் கிராமத்திலும் அநேகர் ஆதாயப்படுத்தப்பட்டனர்.

இன்னொரு கிராம பகுதியில் சில சகோதரிகள் ஜெபநடைக்காக மாத்திரம் சென்றிருந்தனர். அப்பொழுது தற்செயலாக ஒரு குடும்பத்தை சந்திக்க நேரிட்டது. அவர்கள் அந்த வீட்டில் இருக்கும் சிறு குழந்தை **Tonsil** வியாதியால் பாதிக்கப்பட்டிருப்பதையும், அந்த **Tonsil** கட்டியை **operation** செய்து எடுக்க வேண்டும் என்று மருத்துவர் கூறியதையும் ஜெப நடை சென்ற சகோதரிகளிடம் தெரிவித்தனர். இவர்கள் அவர்களுக்கு ஆறுதல் கூறிவிட்டு, இயேசுவைப் பற்றி சொல்லி அவர்களுக்காக ஜெபித்து வீடு திரும்பினார். என்ன ஆச்சரியம், மறுநாள் அந்த குழந்தையின் தாயார் இந்த சகோதரிகளுக்கு **Call** செய்து, இன்று மருத்துவரை சந்தித்ததாகவும் அவர் **operation** தேவை இல்லை, கட்டி இருந்த இடமே இல்லை என்று சொன்னதாகவும் சந்தோஷத்துடன் கூறினார்.

*இவைகளைக் கேட்கும் பொழுது ஆச்சரியமாக இருக்கிறது அல்லவா? ஜெப நடையும், சுவிசேஷ ஊழியமும் எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது பார்த்தீர்களா friends?. நாம் ஜெபநடை செல்லும்போது நம் பார்வையின் மூலமாய் கூட சத்துருவின் கோட்டைகள் தகர்க்கப்படும். வாயின் வார்த்தைகள் மூலம் அற்புதங்கள் நடக்கும். பிசாசின் இராஜ்ஜியம் நடுங்கும். ஜனங்கள் கொள்ளைப் பொருட்களாய் நமக்கு கிடைப்பார்கள். நாம் ஒவ்வொரு நாளும் அநேக இடங்களுக்கு பயணம் செல்கிறோம், போகும் இடங்களில் எல்லாம் நாம் ஜெபித்துக் கொண்டே செல்லும் பொழுது ஒரு மாற்றத்தைக் காண்போம். எனவே ஜெபநடை செல்வோம், சுவிசேஷம் சொல்வோம், தேசத்தை சுதந்தரிப்போம்.*





# எழுப்புதலின் விதைகள்!

## அலெக்ஸாண்டர் டஃப்

**இன்றைய எழுப்புதலுக்காக அன்றே வித்திட்ட மானிடர்கள், எந்த வசதி வாய்ப்புகளையும் எதிர்பாராமல் ஆத்துமாக்களுக்காகத் தங்கள் ஜீவனையே கொடுத்தனர். அவர்களைப் பற்றி இன்றைய வாலிபர்களுக்குத் தெரிந்திருக்க வாய்ப்பில்லை. எனவே அவர்களைப் பற்றி அறிந்துகொள்ள கடந்த 9 மாதங்களாக “எழுப்புதலின் விதைகள்” என்ற தலைப்பில் கிறிஸ்துவுக்காக தங்கள் வாழ்க்கையையே அர்ப்பணித்த பலரைப் பற்றி பார்த்து வருகிறோம். கடந்த மாதம் உலகிலேயே அதிக கடினமான பணித்தளத்தை எனக்குத் தாரும் என்று கேட்டு, சுவிசேஷம் வெளிப்படையாகச் சொல்ல அதிகத் தடையுள்ள சீனா தேசத்தில், 25 வருடம் பணிபுரிந்து, சீன மொழியில் வேதத்தை முதலாவது மொழி பெயர்த்து, அழியாத கிறிஸ்துவின் வார்த்தையைச் சீன மக்களின் கரத்தில் கிடைக்கப் பெற செய்த இராபர்ட் மோரிசன் என்ற மிஷனெரியைக் குறித்துப் பார்த்தோம். இந்த மாதம் 18ஆம் நூற்றாண்டில் தேவ ஒத்தாசையோடு இந்தியாவிற்கு ஒரு புதிய திட்டத்துடன் வந்து, உயர்ஜாதி மக்களைச் சுவிசேஷத்திற்குச் செவிசாய்க்கச் செய்த ஒரு மிஷனெரியைக் குறித்துப் பார்க்க இருக்கிறோம்.**



1806ம் ஆண்டு ஏப்ரல் 25ம் தேதி ஸ்காட்லாந்து தேசத்தில் பிறந்து வளர்ந்தவர் **அலெக்ஸாண்டர் டஃப் (Alexander Duff).** இவர் ஆண்ட்ரூஸ் பல்கலைகழகத்தில் வேதாகமப் பட்டமும், அறிவியல் படிப்பில் பட்டமும் பெற்றார். 1820ம் ஆண்டு ஸ்காட்லாந்தில் உயிர்மீட்சியும், மிஷனெரி பாரமும் தீப்போலப் பரவியது. அப்போது அலெக்ஸாண்டர் ஆண்டவரை ஏற்றுக்கொண்டு, 23ம் வயதில் மிஷனெரிப் பணிக்குத் தன்னை அர்ப்பணித்தார். 1829ம் ஆண்டு ஸ்காட்லாந்து தேவாலயம் இவரை முதல் மிஷனெரியாக நியமித்தனர். அதே ஆண்டு **Anne Duff** என்ற பெண்ணை திருமணம் செய்தார். அதன் பின்பு 1830ம் ஆண்டு அவரும் அவரது மனைவியும் இந்தியாவில் உள்ள உயர்ந்த ஜாதி மக்களை சுவிசேஷத்தால் சந்திக்க புதிய தரிசனத்துடன் கல்கத்தாவிற்கு மிஷனெரிகளாக கப்பற்பயணம் மேற்கொண்டனர். இப்பயணத்தின்போது 2 கப்பற்சேதங்களை சந்திக்க நேர்ந்தது. அதில் ஒன்றில் தன்னுடைய எல்லாப் புத்தகங்களையும், சான்றிதழ்களையும், உடைமைகளையும் இழந்தார்.

இழப்பின் மத்தியிலும் மனம் தளராமல் பயணத்தைத் தொடர்ந்தார். இந்தியா வந்தவுடன் தனது புதிய

தரிசனமான **மேற்கத்தியக் கலை அறிவியற் கல்வியுடன் ஆங்கிலமும், வேதாகமமும் சொல்லித்தந்து அதன்மூலம் உயர்குல மக்களின் மூடநம்பிக்கைகளை ஒழித்து** அவர்களது அறிவுக்கண்களைத் திறந்து, இயேசுவே இரட்சகர் என்பதை அவர்களுக்கு அறிவிக்க ஆயத்தமானார்.

இவர் இந்தியாவிற்கு வருவதற்கு முன்பு செல்வந்தர்கள் மற்றும் உயர்குல மக்கள், சுவிசேஷத்திற்குச் செவிசாய்க்கும் வாய்ப்புகள் மிகவும் குறைவாகவே இருந்தது. கிராமத்தில் வாழ்ந்த ஏழை மக்களும், தாழ்ந்தகுல மக்களும் சுவிசேஷத்திற்கு காட்டின வாஞ்சை இவர்களிடம் இல்லை.

இதன்மூலம் இந்தியாவில் கிறிஸ்தவத்தை ஸ்திரமாக நிலைநாட்ட முடியும் என்பது அவரது அசையாத நம்பிக்கையாக இருந்தது. இந்த மிஷனெரித் தரிசனத்தை அப்போது இந்தியாவில் இருந்த மிஷனெரிகளும், கல்வி நிறுவனங்களின் பிரதிநிதிகளும் வன்மையாகக் குறை கூறியபோதும், இவர் மனந்தளராமல் இந்தியா வந்த சிலமாதங்களிலேயே ஒரு ஆங்கிலப் பள்ளியை ஆலமரத்தடியில் ஐந்து மாணவர்களுடன் ஆரம்பித்தார். ஒரு வாரத்திற்குள் 300 மாணவர்கள் சேர்ந்துவிட்டனர். ஒருகூட்ட உயர்குல வங்காள மொழிபேசும் இளைஞர்கள் அதிக ஆர்வம் காட்டினர். மேற்கத்தியக் கலை, அறிவியல் , ஆங்கிலம் சொல்லிக்கொடுக்கப்பட்டாலும் கிறிஸ்தவ மதப் போதனையே அடிப்படையாகவும் அதிக முக்கியத்துவம் வாய்ந்ததாகவும் இருந்தது. அனுதினமும் ஜெபத்துடன் பள்ளி ஆரம்பிக்கப்பட்டு, வேதத்தில் ஒருபகுதி வாசிக்கப்பட்டு, விளக்கமும் கொடுக்கப்பட்டது. பாடத்திட்டத்தில் வேதமும் ஒரு பாடமாகச் சொல்லிக் கொடுக்கப்பட்டது. பள்ளி ஆரம்பித்து மூன்று வருடத்திற்குள் நான்குபேர் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு ஞானஸ்நானம் பெற்றனர்.



இதனைப் பார்த்து பயந்து சிலர் பள்ளியை விட்டு வெளியேறினாலும், ஆர்வம் உள்ள அநேகரைத் தேவன், அவரது பள்ளிக்கு அழைத்து வந்தார். பள்ளி ஆரம்பித்து பத்தாவது ஆண்டில் இவரது பள்ளியில் 800 மாணவர்கள் படித்தனர். அடுப்பெரிக்கும் பெண்களுக்கு படிப்பு எதற்கு? என கேள்வி இருந்த காலத்தில், உயர்குலப் பெண்களுக்காக ஒரு தனிப் பள்ளியையும் நிறுவினார். இது பல செல்வ சீமாட்டிகளை ஈர்த்தது. நாட்கள் ஆக ஆக ஆயிரக்கணக்கான மாணவர்கள் இவரது பள்ளியில் பயின்றனர். **இவரது ஊழிய நாட்களில் நன்கு படித்த திறமையுள்ள உயர்குல மக்களில் 33 பேர் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு பின்பற்றினார்கள்.** இந்த சிறிய கூட்டம் சமுதாயத்தில் அதிகத் தாக்கத்தை ஏற்படுத்துகிறதாகவும் அதில் சிலர் மிஷனெரிகளாகவும் போதகர்களாகவும் முக்கியமான திருச்சபை தூண்களாகவும் விளங்கினார்கள் என்பதும் **அலெக்ஸாண்டர் டஃப்** ஊழியத்தின் பெரிய வெற்றியாகும்.

இவர் வாழ்ந்த நூற்றாண்டில் ஒரு வெற்றியுள்ள மிஷனெரியாகவும், வாக்குவன்மை நிறைந்த (Missionary Orator) மிஷனெரியாகவும் திகழ்ந்தார். இங்கிலாந்து, அயர்லாந்து, ஸ்காட்லாந்து, வேல்ஸ், அமெரிக்கா போன்ற பல்வேறு நாடுகளில் பயணம் செய்து, தனது ஊழியத்திற்காக ஜெப, பண உதவிகளைத் திரட்டினார். இவரது முன்னேற்றப் பணியினால் 100க்கும் மேற்பட்ட வாலிபர்கள் வெளிநாட்டுக்கு மிஷனெரியாகப் பணியாற்ற முன் வந்தனர். இந்த மிஷனெரி முறையான கல்வியையும் சுவிசேஷத்தையும் சேர்த்துத் தரும் முறையை (Combining Education And Evangelism) உலகம் முழுவதும் பின்பற்றத் தொடங்கினார்கள்.

**அன்பான வாலிபர்களே! அலெக்ஸாண்டர் டஃப் தேவன் தந்த தரிசனத்தின்படி செல்வந்தர்கள், உயர்குல மக்கள் மத்தியில் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து அநேகரை ஆண்டவருக்குள் வழிநடத்தினார். (Urbanisation) பட்டணங்களில் குடியேறுதல் அதிகரித்துவரும் இந்நாட்களிலும் கல்விக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கும் இன்றைய பெற்றோர், மாணவர்கள் மத்தியிலும் நமது சுவிசேஷ பணித்திட்டம் என்ன? நகரங்களில் நாகரீகமாகச் செல்வச்செழிப்புமிக்க மக்களைச் சந்திக்க ஆண்டவர் நம்மையும் அலெக்ஸாண்டர் டஃப் போல அழைப்பாரானால் நம்மை நாம் அர்ப்பணிப்போமா?**



# வாலிபர் உலகம்

இயேசு விடுவிக்கிறார் வாலிபர் ஊழியத்தின் மூலமாக வாலிபர் உலகம் என்ற மாதாந்திர பத்திரிக்கை 7 மொழிகளில் வெளியிடப்பட்டு வருகிறது. ஒவ்வொரு மாதமும் வாலிபர்களுக்கு ஏற்ற சுவாரஸ்யமான தலைப்புகளில் மோகன் அங்கிள் செய்தி, தினந்தோறும் ஜெபிக்க ஜெபக்கையேடு, வாலிபர்களின் சாட்சிகள், ஆலோசனை பகுதி, எழுப்புதல் செய்திகள் போன்றப் பல கட்டுரைகள் வெளி வருகின்றன.

**மாதந்தோறும் இப்பத்திரிக்கை உங்கள் இல்லத்திற்கே வர வேண்டுமானால் நீங்கள் தேர்ந்தெடுக்கும் மொழியை Tick செய்து (✓) இந்தப் பகுதியைப் போட்டோ எடுத்துக் கீழ் கொடுக்கப்பட்டுள்ள whatsapp எண்ணுக்குத் தெரியப்படுத்தவும்.**

## சந்தா விவரம்

ஒரு வருட சந்தா
ரூ. 100/-
ஆயுள் சந்தா ரூ. 1000/-
(15 வருடங்கள்)
வங்கி அல்லது வெப்சைட் மூலம் செலுத்தலாம்




**நீங்கள் தேர்ந்தெடுக்கும் மொழி...**

- Tamil ☐
- English ☐
- Hindi ☐
- Malayalam ☐
- Telugu ☐
- Kannada ☐
- Bengali ☐

## Bank Detail

A/C Name: JESUS REDEEMS YOUTH MINISTRY
A/C No: 054100710400515
Bank: TAMILNAD MERCANTILE BANK LTD.,
Branch Code: 000054
IFS Code: TMBL0000054
MICR Code: 627060021
SWIFT Code: TMBLINBBTUT


**youth.jesusredeems.com**
என்ற வெப்சைட் மூலமாகவும் செலுத்தலாம்.

## Youth World Magazine

ஒரு வருட சந்தா ரூ.100/- செலுத்தியப்பின் உங்களது முழு முகவரி, பின்கோடு மற்றும் தொலைபேசி எண்ணைத் தெளிவாக அனுப்பவும்.

**Whatsapp: 97509 55547**

# ஆயத்தமாக இருந்த தாவீது



ஈசாய் தன் குமாரனாகிய தாவீதிடம், தன் சகோதரர்களுக்குச் சாப்பாடு கொடுத்து, அவர்களை விசாரித்து வரும்படி அனுப்பியபோது, சவுலும், இஸ்ரவேலர் எல்லாரும் ஏலா பள்ளத்தாக்கில் பெலிஸ்தருக்கு எதிராக யுத்தத்திற்கு அணிவகுத்து நின்றதை தாவீது பார்த்தான். கோலியாத்தின் கர்ஜனையைப் பார்த்து இஸ்ரவேலர்கள் யாரும் போரிட முன்வரவில்லை. தாவீது, ‘‘நான் போரிட ஆயத்தமாக இருக்கிறேன்’’ என்றதும், தாவீதின் சகோதரர்கள் அவன்மீது கோபம் கொண்டார்கள். அதற்குத் தாவீது, ‘‘நான் இங்கு வந்ததற்கு முகாந்திரம் இல்லையா?’’ என்றுக் கேட்டான். சவுல் தன் யுத்த வஸ்திரங்களை அவனுக்கு உடுத்துவித்து அனுப்பியபோது தாவீதுக்கு அதில் பழக்கமில்லாததால் அவற்றை நிராகரித்துவிட்டு, 5 கூழாங்கற்களை எடுத்து, தன் அடைப்பையில் போட்டு, தடியை தன் கையில் பிடித்துக் கொண்டு, தன் கவணை எடுத்து இடுப்பில் சொருகிக் கொண்டு, கோலியாத்தின் முன்போய் நின்றான். தாவீது, கோலியத்தைப் பார்த்துப் பயப்படாததால் கோலியாத் கோபத்தில் தாவீதை நோக்கிப் பாய்ந்தான். தாவீது தன் அடைப்பையில் இருந்த கூழாங்கல்லை எடுத்து, கவணில் வைத்துக் குறிபார்த்து கோலியாத்தின் நெற்றியில் அடித்தான். கோலியாத் நிலைகுலைந்து பெரும் மலை சரிவதுபோல் சரிந்து விழுந்தான் (1 சாமு.17:1-40).

**அன்பான வாலிபர்களே, ஆடு மேய்த்துக்கொண்டிருந்த தாவீது தன் ஆடுகளைக் கொடிய மிருகங்களிடமிருந்து பாதுகாக்க கர்த்தரின் பெலத்தோடு எப்போதும் ஆயத்தமாய் இருந்தான். அப்படி எந்த சூழ்நிலைக்கும் ஆயத்தமாக இருந்ததால்தான் இராட்சதனான கோலியாத்தை எதிர்த்து நின்று போரிட்டு வெற்றி பெற்றான். நீங்களும் எப்போதும் தாவீதை போல ஆயத்தமாய் இருக்க ஒப்புக்கொடுப்பீர்களா ?**

# ஆயத்தமில்லாத லோத்தின் மனைவி



லோத்தும் அவருடைய குடும்பமும் ஆபிரகாமுடன் கானான் தேசத்தில் ஒன்றாக வசித்து வந்தார்கள். ஒருநாள் ஆபிரகாம், ‘‘நம்முடைய எல்லா மிருகங்களுக்கும் இங்கே போதிய நிலம் இல்லை, எனவே நீ ஒரு பக்கம் போனால், நான் வேறொரு பக்கம் போகிறேன்’’ என்று கூறவே, தனது மிருகங்களுக்குத் தண்ணீரும் ஏராளமான புல்லும் இருந்த யோர்தானைத் தெரிந்தெடுத்து லோத்து போனார். அங்கிருந்து சோதோம் நகரம் குடியேறினார். சோதோம் நகர மக்கள் பொல்லாத ஜனங்களாக இருந்ததால் லோத்து மிகுந்த மனவேதனை அடைந்தார். தேவனும் மனவேதனைப்பட்டு சோதோம் கொமோரா நகரத்தை அழிக்கப் போவதாக எச்சரித்தார். இதற்காக இரண்டு தேவதூதர்களை அனுப்பி, லோத்தின் குடும்பத்தை வெளியேறச் சொன்னபோது அவர்கள் நேரம் கடத்திக் கொண்டிருந்ததால், அந்தத் தூதர்கள், அவர்கள் கரங்களைப் பிடித்து அந்த நகரத்துக்கு வெளியே கொண்டு போய் விட்டுச் ‘‘சீக்கிரம் இங்கிருந்து ஓடி விடுங்கள்’’ என்று சொல்லி அனுப்பி வைத்தார். லோத்தும் அவரின் மகள்களும் ஆயத்தமாக இருந்ததால் கீழ்ப்படிந்து வேகமாக ஓடிப் போனார்கள். ஆனால் லோத்தின் மனைவிக்கோ உலகப் பொருள்கள்மேல் உள்ள ஆசையினாலும், அந்த மாற்றத்தை ஏற்றுக்கொள்ள ஆயத்தமாக இல்லாததினாலும் அந்தத் தேசத்தை விட்டுச் சிறிது தூரம் சென்றதும், ஏக்கத்தோடு திரும்பிப் பார்த்து உப்புத்தூண் ஆனாள். (ஆதி.13:5-13;18:20-33; 19:1-29)

**வாலிபர்களே, எதற்கும் ஆயத்தமாக இருந்தால் தான் ஆண்டவர் உங்களைப் பயன்படுத்த முடியும். ஆண்டவர் போகச் சொல்கிற இடத்துக்கு உடனே செல்வதற்கு நீங்கள் ஆயத்தமாக இருக்கிறீர்களா? அல்லது திரும்பிப் பார்த்துக் கொண்டிருக்கிறீர்களா?**



# ஜெபக் கையேடு

## நவம்பர் 2025

ஜெபம்: எஸ்தர்

1 குழந்தைகள் கடத்தப்படுவது, கொலை செய்யப்படுவது, துஷ்பிரயோகம் செய்யப்படுவது தடுக்கப்படவும், அவர்கள் பாதுகாக்கப்படவும் ஜெபிப்போம்.

2 தேசத்தில் உள்ள ஒவ்வொரு குழந்தைகள் மேலும் கர்த்தருடைய பாதுகாப்பின் கரம் நீட்டப்படவும், அவர்களுக்கு விரோதமாகக் கிரியை செய்யும் பொல்லாதவர்களுடைய கரங்களுக்குத் தப்புவிக்கப்படவும் ஜெபிப்போம்.

3 குழந்தைகளைக் கடத்தி தவறான காரியங்களுக்குப் பயன்படுத்துகிற பொல்லாத மனிதர்கள் மனந்திரும்பவும், அவர்களிடமிருந்து குழந்தைகள் விடுவிக்கப்படவும் ஜெபிப்போம்.

4 ஏழை, எளிய மற்றும் தெருவோரங்களில் வசிக்கும் குழந்தைகளைத் தங்களுடைய சுய இலாபத்துக்காகக் கடத்துகிற பொல்லாத மனிதர்களைக் கர்த்தர் சந்திக்கும்படி பாரத்தோடு ஜெபிப்போம்.

5 சிறு பிள்ளைகளின் இரத்தத்தை சிந்த வைக்கிற பொல்லாத ஆவிகளின் வல்லமைகள் கட்டப்பட ஜெபிப்போம்.

6 சிறு பிள்ளைகளைக் கடத்தி, வியாபார பொருளாக மாற்றும்படிக்கு எத்தனிக்கிற பொல்லாத மனிதர்களைக் கர்த்தர் அவமாக்கி போடும்படி ஜெபிப்போம்.

7 சிறுவர் சீர்திருத்தப் பள்ளிகளில் குற்றவாளிகளாக அடைக்கப்பட்டிருக்கும் குழந்தைகள் மனந்திரும்பி வெளியே வரவும், அவர்களின் எதிர்கால வாழ்க்கை ஆசீர்வதிக்கப்படவும் ஜெபிப்போம்.

8 பெற்றோரை இழந்து வாழும் குழந்தைகளின் எதிர்காலத்தைக் கர்த்தர் பொறுப்பெடுத்துக் கொள்ள ஜெபிப்போம்.

9 ஒவ்வொரு ஆண்டும் நம் தேசத்தில் ஏற்படும் 4.5 லட்சம் முதல் 5 லட்சம் சாலை விபத்துகளில் 1.5 லட்சம் பேர் உயிரிழக்கும் எண்ணிக்கை குறையவும், விபத்துக்கள் இல்லாத இந்திய தேசமாக மாறவும் ஜெபிப்போம்.

10 உலகளவில் சாலை விபத்துகளில் அதிகம் பேர் உயிரிழக்கும் நாடுகளின் பட்டியலில், இந்தியாவும், தமிழ்நாடும் முதலிடத்தில் உள்ளன. இவை முற்றிலும் தடுக்கப்பட ஜெபிப்போம்.

11 போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறையில் உள்ள ஊழல்கள் ஒழிக்கப்படவும், சாலைகளைச் சீரமைக்க மத்திய மாநில அரசாங்கங்கள் முன்வரவும் பாரத்தோடு ஜெபிப்போம்.

12 குடிபோதையில் வாகனங்களை இயக்குபவர்களுக்கு அபராதம் விதிக்கவும், தகுந்த தண்டனைகள் கொடுக்கவும் அரசு முன் வர ஜெபிப்போம்.

13 அதிவேகமாக வாகனங்களைச் செலுத்துவதாலும், சாலையில் குறிப்பிடப்பட்டுள்ள வேக நிபந்தனைகளை மீறிச் செல்வதாலும், வரும் விபத்துகள் தடுக்கப்பட ஜெபிப்போம்.

14 நெடுந்தூர பயணம் செய்பவர்கள் போதிய ஓய்வு மற்றும் உறக்கம் இல்லாமல் வாகனத்தை இயக்குவதால் ஏற்படும் சாலை விபத்துகள் தவிர்க்கப்பட ஜெபிப்போம்.



15 புகையிலை பழக்கத்தால் ஆண்டுதோறும் இந்தியாவில் 13 லட்சத்து 50 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் உயிரிழக்கும் அவல நிலை மாற ஜெபிப்போம்.



**16** இந்தியாவில் 10ல் ஒருவர் புகையிலை தொடர்பான நோய்களால் தங்களுடைய ஆயுசு நாட்களுக்கு முன்கூட்டியே உயிரிழக்கும் நிலை மாற ஜெபிப்போம்.

**17** புகையிலைத் தொடர்பான நோய்களுக்கு, ஆண்டுதோறும் இந்தியா ரூ.1.77 லட்சம் கோடிக்கு மேல் செலவிடுகிறது. புகைப்பழக்கத்திற்கு அடிமையாக இருப்பவர்கள் இதிலிருந்து விடுபட ஜெபிப்போம்.

**18** சிகரெட் மற்றும் பீடி விற்பனையை இந்தியா முழுவதும் தடைசெய்ய மத்திய, மாநில அரசுகளுக்கு உச்சநீதிமன்றம் உத்தரவிடும்படி ஜெபிப்போம்.

**19** நாடு முழுவதும் கடந்த பத்து ஆண்டுகளில் 17 லட்சத்துக்கும் அதிகமானோர் எச்.ஐ.வி– நோய் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் அனைவரும் சுகம்பெற ஜெபிப்போம்.

**20** இந்நோயினால் மரணம் நிச்சயம் எனத் தெரிந்தும் துணிகரமாகப் பாவத்தில் ஈடுபடும் மனிதர்கள் மனந்திரும்பவும், பாதிக்கப்பட்டுள்ள மக்கள் சமுதாயத்தில் மனிதாபிமானத்துடன் நடத்தப்படவும் ஜெபிப்போம்.

**21** எச்.ஐ.வி தொற்று அதிகம் பாதித்துள்ள மாநிலங்கள் – ஆந்திர 3,18,814, மகாராஷ்டிரா 2,84,511, கர்நாடகம் 2,12,982, தமிழ்நாடு 1,16,536, உத்தரப் பிரதேசம் 1,10,911, குஜராத் 87,440. பாதிக்கப்பட்ட மாநிலங்கள் இதிலிருந்து மீண்டு வரவும் அரசு தகுந்த நடவடிக்கை எடுக்கவும் ஜெபிப்போம்.

**22** எந்தத் தவறும் செய்யாத சூழ்நிலையில், பெற்றோர்கள் செய்த தவறினால் பிறப்பிலிருந்தே எய்ட்ஸ் நோயால் பாதிக்கப்பட்டிருக்கும் குழந்தைகள்மீது கர்த்தர் மனமிரங்கி பூரண சுகத்தை கட்டளையிட ஜெபிப்போம்.

**23** எய்ட்ஸ் நோய்குறித்த விழிப்புணர்வுகளை மக்கள் மத்தியில் ஏற்படுத்திட மத்திய மாநில அரசாங்கங்கள் தீவிர முயற்சிகளை எடுக்க ஜெபிப்போம்.

**24** சபைகளில் சரியான சத்தியமும், அன்பும், ஒருமனமும் தேவ ஜனங்கள் மத்தியில் காணப்படவும், சிறுபிள்ளைகள், வாலிபர்கள் ஆவியில் அனலாகவும் ஜெபிப்போம்.

**25** கர்த்தர் பரிசுத்தராய் இருக்கிறது போல, கர்த்தரை அறிந்த ஒவ்வொரு தேவ ஜனமும், கர்த்தருக்குள்ளாய் தங்களை பரிசுத்தப்படுத்திக் கொண்டு, ஆயத்தத்தோடு தேவனை ஆராதிக்க ஜெபிப்போம்.

**26** கடைசி நாட்களில் மாம்சமான யாவர்மேலும் என் ஆவியை ஊற்றுவேன் என்று வாக்களித்த தேவன், இந்த நாட்களில் தாகமாய் கேட்கிற ஒவ்வொருவருக்கும் அவருடைய அபிஷேகத்தை அளவில்லாமல் ஊற்றும்படியாக ஜெபிப்போம்.

**27** வாஞ்சையாய் கேட்கிற ஒவ்வொருவர் மீதும் கர்த்தர் அக்கினி அபிஷேகத்தை ஊற்றும்படியாகவும், வரங்களினாலும், கனிகளினாலும் நிரப்பி, அற்புத அடையாளங்களைக் காணச்செய்யவும், கடைசிக் கால எழுப்புதல் சபைகளில் உண்டாகவும் ஜெபிப்போம்.

**28** தேசங்களைக் கெடுக்கும் விபச்சார, வேசித்தன ஆவிகள், கொலை, கொள்ளை ஆவிகள், போதை பொருட்களுக்கு அடிமையாக்கும் அடிமைத்தன ஆவிகள் அழிக்கப்படவும் ஒவ்வொருவரும் விடுவிக்கப்படவும் ஜெபிப்போம்.

**29** உலகத்திலுள்ள எல்லா தேசங்களிலும் சுவிசேஷம் அறிவிக்கப்படவும், எல்லா நகரங்களிலும் கிராமங்களிலும் சபைகள் ஸ்தாபிக்கப்படவும், தேவ இராஜ்ஜியம் கட்டப்படவும் ஜெபிப்போம்.

**30** இந்தக் கடைசி காலங்களில் ஆத்தும பாரமிக்க ஊழியர்கள் திரளாய் எழும்பிடவும், உலகம் இதுவரை கண்டிராத மிகப்பெரிய இரட்சிப்பை எல்லா தேசங்களிலும் கர்த்தர் கட்டளையிடவும் மன்றாடி ஜெபிப்போம்.

# செய்திகள்!

## இந்தியாவில் புற்றுநோய் பாதிப்பு

## 1990 முதல் 26 சதவீதம் அதிகரிப்பு!

இந்தியாவில் புற்றுநோய் பாதிப்பு கடந்த 1990-ம் ஆண்டு முதல் 26% அதிகரித்துள்ளது. இதுகுறித்து 'தி லான்செட்' இதழில் வெளியான ஆய்வு முடிவுகளின்படி, இந்தியாவில் புற்றுநோய் பாதிப்பு 33 ஆண்டுகளில் 26% அதிகரித்துள்ளது.



1990-ல் 1 லட்சம் மக்கள் தொகைக்கு 84.8 ஆக இருந்த புற்றுநோய் பாதிப்பு 2023-ல் 107.2 ஆக உயர்ந்துள்ளது. இதுபோல் புற்றுநோய் காரணமாக ஏற்படும் உயிரிழப்பு 21% அதிகரித்துள்ளது. அதே வேளையில் அமெரிக்கா மற்றும் சீனாவில் 33 ஆண்டுகளில் புற்றுநோய் பாதிப்பு மற்றும் உயிரிழப்பு ஆகிய இரண்டும் கணிசமாகக் குறைந்துள்ளது.

இதுகுறித்து டெல்லி எய்ம்ஸ் மருத்துவமனையின் புற்றுநோய் நிபுணர் டாக்டர் அபிஷேக் சங்கர் கூறுகையில், "அமெரிக்கா மற்றும் சீனாவில் புற்றுநோய் பாதிப்பும் உயிரிழப்பும் கணிசமாகக் குறைந்ததற்கு, இவ்விரு நாடுகளிலும் வலுவான புகையிலை கட்டுப்பாடு, அனைவருக்கும் தடுப்பூசி, ஒழுங்கமைக்கப்பட்ட பரிசோதனை தான் காரணமாக உள்ளது.

அதிக புகையிலை பயன்பாடு, உடல் பருமன், நோய்த்தொற்றுகள் போன்ற ஆபத்துக் காரணிகள் இந்தியாவில் அதிகமாக உள்ளது. அதேவேளையில் புற்றுநோய் தொடக்க நிலையிலேயே கண்டறியப்படுவது குறைவாக உள்ளது. எனவே புற்றுநோய் ஆபத்தைத் தடுக்கும் உத்திகளை நாம் அவசரமாக வலுப்படுத்த வேண்டும்'' என்றார். **-செப்டம்பர் 30, 2025 இந்து தமிழ் திசை.**

### பணிநீக்கம் செய்யப்படும்

## டி.சி.எஸ். ஊழியர்களுக்கு 2 ஆண்டு ஊதியம்!


டாடா கன்சல்டன்சி சர்வீசஸ் (TCS) நிறுவனத்தில் சுமார் 6.13 லட்சம் பேர் பணியாற்றி வருகின்றனர். வரும் 2026-ம் ஆண்டில் 2 சதவீத ஊழியர்கள் குறைக்கப்படுவார்கள் என்று டிசிஎஸ் அண்மையில் தெரிவித்தது. இதன்படி சுமார் 12,000 பேர் பணி நீக்கம் செய்யப்படுவார்கள் என்று தெரிகிறது.




இந்தச் சூழலில் டிசிஎஸ் நிறுவனத்திலிருந்து பணி நீக்கம் செய்யப்படும் ஊழியர்களுக்கு முன்கூட்டியே நோட்டீஸ் வழங்கப்படும். அவர்களின் பணி அனுபவத்தைப் பொறுத்து 6 மாதங்கள் முதல் 2 ஆண்டுகள் வரையிலான ஊதியம் இழப்பீடாக வழங்கப்படும் என்று தகவல்கள் வெளியாகி உள்ளன. இந்தச் சூழலில் இதன்படி 8 மாதங்களுக்கு மேல் பணி ஒதுக்கப்படாமல் இருக்கும் ஊழியர்களுக்குச் சிறிய அளவிலான இழப்பீடு மட்டுமே கிடைக்கும். 10 ஆண்டுகள் முதல் 15 ஆண்டுகள்வரை பணியாற்றிய ஊழியர்களுக்கு 18 மாதங்களுக்கான ஊதியம் கிடைக்கும். அதற்கு மேல் பணியாற்றியவர்களுக்கு 24 மாதங்களுக்கான ஊதியம் கிடைக்கும் என்று கூறப்படுகிறது. பணி நீக்கம் செய்யப்படும் ஊழியர்கள், புதிய வேலைவாய்ப்புகளைத் தேடுவதற்கு தேவையான உதவிகளை டிசிஎஸ் வழங்கும். மேலும் ஓய்வு பெறும் வயதில் இருப்பவர்கள், விருப்ப ஓய்வு திட்டத்தில் நிறுவனத்திலிருந்து வெளியேற ஏற்பாடு செய்யப்படும் என்று டிசிஎஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. **– அக்டோபர் 3, 2025 இந்து தமிழ் திசை.**

Owned & Published by: Brother Mohan C. Lazarus from Jesus Redeems, Nalumavadi 628 211 &
Printed by: Mrs. Joyce Lazarus at Angel Press, 13/82 A, Lakhsmipuram, Nalumavadi - 628 211



**நவம்பர் மாதம் வந்துவிட்டாலே நம் மனதில் முதலில் ஒலிக்கும் நாள் குழந்தைகள் தினம் தான். உலகின் பல சிறப்பான தினங்களில், குழந்தைகள் தினம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. குழந்தைகளின் மகிழ்ச்சிக்காகக் கொண்டாடப்படும் இந்த நாளைப் பற்றிய சில சுவாரஸ்யங்களை பார்ப்போம்.**

**குழந்தைகள் என்பவர்கள் எப்போதும் வெள்ளை மனமும், கள்ளமற்ற இதயமும் கொண்டவர்கள். 1889ஆம் ஆண்டு நவம்பர் 14ஆம் தேதி, அலஹாபாத்தில் பிறந்த ஜவஹர்லால் நேருவின் பிறந்தநாள், நாடு முழுவதும் குழந்தைகள் தினமாகக் கொண்டாடப்படுகிறது.**

நேரு பிரதமராக இருந்த காலத்தில், குழந்தைகள் மற்றும் இளைஞர்களின் கல்வி, முன்னேற்றத்திற்காகப் பல முக்கியமான திட்டங்களை நிறைவேற்றினார். அரசியல் பணிகளில் எவ்வளவு பிஸியாக இருந்தாலும், குழந்தைகளோடு நேரம் செலவிடுவதை வழக்கமாகக் கொண்டிருந்தார். "குழந்தைகளுக்குச் சரியான முறையில் கல்வி கற்பிக்கப்பட வேண்டும்; அதுவே அவர்களின் வளர்ச்சிக்கான விதை" என்பதில் அவர் எப்போதும் அக்கறை கொண்டிருந்தார்.

உலகிலேயே அதிகமான குழந்தைகளுள்ள நாடுகளில் இந்தியா முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது. குழந்தைகள்மீது நேருவின் அன்பும், நேருவின் மீது குழந்தைகளின் அளவற்ற பாசத்தின் காரணமாகவே, அவரது பிறந்த நாள் இன்று குழந்தைகள் தினமாகக் கொண்டாடப்படுகிறது.

பெற்றோர், குழந்தைகளுடன் பழகும்போது அவர்களைப் போலவே குழந்தைகளாக மாறினால்தான், நாளைய வெற்றியாளர்களாக அவர்களை உருவாக்க முடியும். நாட்டின் முன்னேற்றத்திற்கு அடித்தளமாக விளங்குபவர்கள் குழந்தைகளே. குழந்தைப் பருவத்தில் கற்றுக் கொள்ளும் பழக்கவழக்கங்களும் அறிவும் தான், எதிர்காலத்தில் அவர்களின் வாழ்க்கையிலும் சமுதாயத்திலும் பிரதிபலிக்கும்.

அதனால், குழந்தைப் பருவத்திலேயே நல்ல பழக்கங்களை விதைத்து, நல்ல நண்பர்களோடு பழக விடுவது மிக அவசியம். அப்போது தான் அவர்களுக்குள் சகோதரத்துவமும், உதவும் மனப்பான்மையும் வளர்ச்சி பெறும்.

ஒவ்வொரு குழந்தைக்கும் தனித்துவமான கனவுகள் உண்டு. பெற்றோர் அவற்றை உணர்ந்து, நிறைவேற்ற முயற்சிக்க வேண்டும். குழந்தைகள் தினத்தில், பெற்றோரும் ஆசிரியர்களும் தமக்குள்ள குறைகளை ஒதுக்கி வைத்துவிட்டு, குழந்தைகளின் ஆர்வம், அனுபவம், ஆசைகள், அணுகுமுறை, மனநிலைகள் ஆகியவற்றை கூர்ந்து கவனிப்பது அவர்களின் எதிர்காலத்திற்கு மிகப் பெரிய முதலீடாக மாறும்.

குழந்தைகள் நாளைய சமுதாயத்தின் தூண்கள். "இன்றைய குழந்தைகள் நாளைய நாட்டின் குடிமக்கள்" என்பதுபோல, அவர்களின் வளர்ச்சியே நாட்டின் வளர்ச்சி.

**எனவே, 2025 நவம்பர் 14ஆம் தேதி நாம் கொண்டாடவிருக்கும் குழந்தைகள் தினத்தில், ஒவ்வொரு குழந்தையின் கனவுகளையும், திறமைகளையும் மதித்து, அன்பும் ஊக்கமும் அளித்து, அவர்கள் மகிழ்ச்சியாகவும் பயனுள்ளவர்களாகவும் வளர உதவுவோம்.**

Registered with Registered News Paper of India No: TNBIL/2010/32847
Postal Registration No: TTN/26/2023-2025.
Date of Publication: 25 – 10 -2025
Date of Posting: 28th to 30th of every month.
Office of Posting: BPC, Thoothukudi HPO – 628 001.
Licensed to Post Without Prepayment No: TN/WPP-108/SR/2023-2025.

# நாலுமாவடியில்...

இயேசு விடுவிக்கிறார் ஊழியங்கள் நடத்தும்

# Achievers

(தேர்வு எழுதும் மாணவ, மாணவியர்களுக்கான சிறப்புப் பிரார்த்தனை)

**ஜனவரி 26**
திங்கள் கிழமை

**நேரம்: 1 மணி முதல் மாலை 4 மணிவரை**

இடம்:
**தேவனுடைய கூடாரம், மோசஸ் அரங்கம், நாலுமாவடி**

தோல்வி பயமா!
கலக்கமா!
படித்தது மறந்து போகிறதா?
சோர்வா!
உங்களுக்காகத் தான்
இந்தப் பிரார்த்தனை!



செய்தியும், ஜெபமும்:
**சகோ. மோகன் சி. லாசரஸ்**

பள்ளிக் கல்லூரி மற்றும் அரசுத் தேர்வு எழுதும்
மாணவ மாணவியர் இந்தச் சிறப்பு பிரார்த்தனையில்
பங்கு பெறலாம் நீங்களும் சாதனையாளர்களாக மாறலாம்!

## பெற்றோர் உங்கள் பிள்ளைகளை அழைத்து வாருங்கள்!

**பாடல், ஆராதனை, சாதித்த மாணவ மாணவியரின் சாட்சிகள், ஆலோசனைகள்
தேர்வில் நல்ல மதிப்பெண்கள் எடுத்துச் சாதனையாளராக மாற டிப்ஸ்
எனப் பல நிகழ்ச்சிகள் உங்களுக்காக!!**

அனுமதி இலவசம்!